Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி25ஞாயிற்றுக்கிழமை(11-10-1998) UTHAYAN- A Lively National Tamil Daily சுடர்:271

# 5ஆம் ஆண்டுபுலமைபரிசில்பரீட்சை
# குடாநாட்டில் 821 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.11

கொழும்பில் நேற்று வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி யாழ். மாவட்டத்தில் இருந்துதோற்றிய மாணவர்களில் 821 மாணவர்கள் குடாநாட்டுக்கான தகுதிகாண் புள்ளி மட்டம் (வெட்டுப் புள்ளி) 110 பெற்று பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேற்படி பரீட்சை முடிவுகளின்படி குடாநாட்டில் முதல் பத்து இடங்களைப் பெற்றமாணவர்களின் பெயர் மற்றும் அவர்களது பாடசாலை அவர்கள் பெற்ற புள்ளி விவரங்கள் வருமாறு:

★ பி. அரிராம் (இணுவில் மத்திய கல்லூரி) — 170 புள்ளிகள்;

★ கே. டில்சன் (உடுவில் மகளிர் கல்லூரி), சுலுக்சன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) — 162 புள்ளிகள்;

★ ரி. சுந்தரலிங்கம் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) — 160 புள்ளிகள்.

★ எஸ். விதுஷன் (புனித ஜோண் பொஸ்கோ) — 158 புள்ளிகள்;

★ வை. தனீஸ்வரன் (புனித ஜோண் பொஸ்கோ) — 157 புள்ளிகள்;

★ எஸ். விஜிதா (தம்பாலை சைவபபிரகாச வித்தியாசாலை) — 156 புள்ளிகள்.

★ ஜி. கிரிசாந்தன் (ஏழாலை மேற்கு சைவசன் மார்க்கவித்தியாசாலை) —

(11 ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட ரீதியாக வெட்டுப்புள்ளி

யாழ்ப்பாணம், ஒக்.11

நேற்று வெளியான ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவின்படி சகல மாவட்டங்களுக்குமான தமிழ்மொழிமூல வெட்டுப் புள்ளி விவரம் வருமாறு:-

★ கொழும்பு — 114
★ கம்பஹா — 120
★ களுத்துறை — 109
★ கண்டி — 114
★ மன்னார் — 110
★ வவுனியா — 123
★ மட்டக்களப்பு — 123
★ கிளிநொச்சி — 107
★ திருகோணமலை — 126

(11 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுகத்தில் இருவர் காயம்

நெல்லியடி ஒக்.11

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த துறைமுகத் தொழிலாளிகள் இருவர் இழுவைப் படகில் இருந்து தவறி கடலில் வீழ்ந்து தலையிலும் காலிலும் பலத்த காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்றது.

கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாசாலை வீதியைச் சேர்ந்த த. தவஸ்ரீதன் (வயது 21), த. யசியன் (வயது 19) ஆகியோரேகாயமடைந்தவர்களவார்.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-109-7)

# விமானத்தை மீட்கும் பணி
# முன்னேற்றம் எதுவுமில்லை

## சுழியோடிகள் மன்னாரில்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 11

இரணைதீவுக்கு அருகே கடலில் மூழ்கிய "லயன் ஏயர்" பயணிகள் விமானத்தை மீட்கும் பணிகளில் இதுவரை எதுவித முன்னேற்றமும்ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானம் கடந்த 29 ஆம் திகதி பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கிப் புறப்பட்ட சமயம் கடலில் வீழ்ந்தது தெரிந்ததே.

விமானம் விழுந்து 13 நாள்கள் கழிந்த நிலையிலும் அதனை மீட்கும் முயற்சியில் இதுவரை முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் மீட்பு முயற்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில்
## தொழிலுக்குச் சென்ற 5 மீனவரைக் காணோம்

செம்பியன்பற்று, ஒக்.11

வடமராட்சிப் பகுதியில் இருந்து வடமராட்சி கிழக்கு கடற்பகுதிக்கு கடந்த 7 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர்படைவீரர் உட்பட இருவர் பலி!
### இனந்தெரியாதோர் சூடு

மட்டக்களப்பு, ஒக்.11

மட்டக்களப்பு - கல்முனை வீதி பாண்டிருப்புக் கிராமத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் சிவில் தொண்டர் படைவீரர் உட்பட இருவர் பலியாகினர்.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய உற்சவம் முடிந்து பொதுமக்கள் திரும்பிக் கொண்டிருந்த போது மேற்படி துப்பாக்கிப் பிர

(11 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். - கொழும்பு போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்
## ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ். —கொழும்பு விமான சேவையில் ஏற்பட்டுள்ள தடங்கலைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச்செயலாளர்களான சு. பரமநாதன், வண. பிதா கே.பி.ஈ. செல்வராசா ஆகியோர் கையெழுத்திட்டு இம்மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். — கொழும்பு விமானப் போக்குவரத்து சடுதியாகத் தடைப்பட்டதனால் போக்குவரத்துக்குத் தயார் நிலையில் இருந்த ஆயிரக்கணக்கானபயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயணிகளுக்கு தற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நடவடிக்கை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வடமராட்சி. தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டு வருவதுடன் இங்குள்ள சோதனைச் சாவடிகளிலும் படையினரின் சோதனைகள் அதிகரித்துள்ளன.

பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளின் போது எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

(இ-15-173-5)

# படையினரின் சிறிய தோல்விகளை சிலர் பெரிது படுத்துவதற்கு முயற்சி
## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.11

படையினரின் மகத்தான வெற்றிகளை சிறுமைபடுத்தி விட்டு அவர்களின் சிறிய தோல்விகளை சிலர் பெரிது படுத்திக் காட்டுகின்றார்கள்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்கில் இடம் பெறும் போரில் சாதனை புரிந்த முப்படைகளைச் சேர்ந்தபடையினருக்கு பதக்கம் வழங்கும் வைபவம்நேற்று பண்டாரநயாக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அதில் கலந்து கொண்டு மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது;

படையினர் விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை தமிழ் மக்களின் மனங்களையும் வென்று வருகின்றனர்.

1995 ஆம் ஆண்டுக்குப்பின் வடக்கில் படையினர் பொது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் தாக்குதல்

வவுனியா, ஒக்.11

ஓமந்தையில் நேற்று மாலை 5-30 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர் மற்றும் மோதல் சம்பவங்களில் 4 விசேட அதிரடிப் படையினர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.

விசேட அதிரடிப் படையினர் சென்ற ஜீப் ஒன்றை இலக்கு வைத்து முதலில் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும்—

பின்னர் மறைந்திருந்து ஜீப்பை நோக்கிக் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனவும்— இராணுவத்தினர் தெரிவித்தனர்.

(இ-164-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நீங்கா நினைவில்...

பேரருட் கலாநிதி

**D. J. அம்பலவாணர்**

(C. S. I.—(யாழ். ஆதீன முன்னாள் பேராயர்)

கால நதியினில் எதிர் நீச்சலிட்டு
தொலை நோக்கில் விதைகளைத் தூவி
நல்லறுவடைகளைக் கண்ணாரக் கண்டு
நல்லாயனாக ஆடுகளை வழிநடத்தி
வல்லபிதா மடியினில் அடைக்கலமானீர்
ஓராண்டென்ன நூறாண்டானாலும்
நின் நினைவுகள் அழிவதில்லை!

— இல்லங்களின் பழைய மாணவர்கள்

(59831)

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
17 — 08 — 1953

அம்பாள் அடியில்
29 — 10 — 1991

## அமரர் ஆறுமுகம் குகதாசன்

(சிவம்)

திதி : 11 — 10 — 1998

பத்தைமேனியைப் பிறப்பிடமாகக் கொண்டு மிருசுவில் கண்ணகை அம்மன் கோயிலில் அமரத்துவம் அடைந்த மகனே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
திருமதி ஆறுமுகம், பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள்,
மருமக்கள், மச்சாள்மார்.

பத்தைமேனி,
அச்சுவேலி.

(59836)

# மரண அறிவித்தல்கள்

## முருகர் - சின்னத்தம்பி

(Retd Navy Officer – Srilanka, Security Service, Jaffna.)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், ஆனந்தம்வடலி றோட், அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய முருகர் சின்னத்தம்பி (Retd; Navy Officer — Srilanke முன்னாள் SecuritY Service — Jaffna) 8-10-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்மலரின் அன்புக் கணவரும், மனோகரன் (கொழும்பு), மகேந்திரன் (ஜேர்மனி), இந்திரகுமார் (ஜேர்மனி), பிறேமினி (கொழும்பு), சாந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், விக்கினேஸ்வரி, மல்லிகா, நந்தினி, சிவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பபிற்றா, பிரவீன், சைனி, றொசான், வேனுஷா, பிறின்ஷா, திவ்வியா, நிருயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-10-98 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. இராஜபூபதி
(பேறாமகள்)

363, ஆனந்தம்வடலி றோட்,
அரியாலை.

(59819)

## செல்லத்துரை மகேந்திரன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திலகவதி தம்பதிகளின் மூத்த அன்பு மகன் மகேந்திரன் பிரான்ஸில் 27-09-98 அன்று காலமானார்.

அன்னார் வசந்தலீலா, வதனி R. D. D. Office, வவுனியா), வனிதா, யேந்திரன் (Well plan Engineer, வவுனியா), வற்சலா (யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு 4 ஆம் வருடம்), காலஞ் சென்ற வர்ணலா, சுவீந்திரன் (யாழ் பல்கலைக்கழக கலைப் பீடம் 1 ஆம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 08-10-98 அன்று பிரான்ஸில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. சுவீந்திரன்
(சகோதரன்)

சொர்ணவடலி லேன்,
கொக்குவில்.

(59835)

# உதைபந்தாட்ட ஒழுங்கு நிரல் தேர்வு

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிண்ண விலகல் முறையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

லீக்குடன் இணைந்த கழகங்கள் பங்குபற்றும் இப் போட்டிக்கான ஒழுங்கு நிரல் தேர்வு இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு சுச்ச மோட்டையில் உள்ள யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

போட்டி தொடர்பான விதிகளும், விண்ணப்ப படிவங்களும் ஏற்கனவே கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இன்று போட்டி தொடர்பான ஒழுங்கு நிரல் தேர்வு நடத்தப்படுததற்கு முன்னர் நேரில் கையளிக்கப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப் படும் என லீக் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## றீகல் டாக்கீஸ்

சச்சமோட்டை.
40 அடி திரையில்
11 — 10 — 1998
11 மணிக்கு
TITANIC - I II
2 30 மணிக்கு
M. G. R. நடித்த
ரகசிய பொலிஸ் -115
(யாவும் புதியநேரப்படி)
[59809]

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்
அரவிந்தசாமி
மதுபாலா • ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் • நாஸர்
நடித்த
**ரோஜா**
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/5020)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
மம்முட்டி - அஞ்சு
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
(ரீகல்)
நெஞ்சுஉருக்கும்காட்சிகள்
காட்சி: 10-30, 2-30
(59843)

## ஸ்ரீ செல்வா சினிமா

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
கார்த்திக் - ரோஜா
நடித்த
உன்னிடத்தில்
என்னைக் கொடுத்தேன்
(நேரடி CD)
கடைசி 2 தினங்கள் மட்டும்
(59842)

## இராஜலட்சுமி திரையரங்கு

நெல்லியடி, கரவெட்டி.
இன்று
விஜய் - தேவயானி
ரம்பா • செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
காட்சிகள்: 10.30, 2.30
(சி/5150)

# 4 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

## தனேந்திரன் துரைராஜன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தனேந்திரன் சிவராணி தம்பதிகளின் மூத்த புதல்வன் செல்வன் துரைராஜன் தனது நான்காவது பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

ச. க. தனேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்

(59844)

# யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் மூத்த பழைய மாணவர்கள், அதிபர்கள், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கௌரவிக்க எமது சங்கம் தீர்மானித்துள்ளது. ஆகையினால் அறுபது வயதைப் பூர்த்தி செய்த எமது கல்லூரி பழைய மாணவர்கள், அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள் தத்தமது முகவரி பற்றிய விவரங்களை சங்கத்தின் செயலாளருக்கு எதிர்வரும் 25-10-1998 இற்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

ஐ. தங்கேஸ்வரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி / 5155)

# தையல் வேலைக்கு பெண்கள் தேவை

2-00 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.

## ஐஸ்வர்யா றேட் சென்ரர்

குருசு மதவடி,
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

(59826)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

விஸ்வகுலதிலகர்

அமரர்

## அம்பலம் தம்பையா

[ஆச்சாரியார்]

கடந்த மாதம் 10 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அம்பலம் தம்பையாவின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

அரசடி வீதி,
திருநெல்வேலி, கிழக்கு.

(கி-5154)

யா/ இளவாலை

# கன்னியர் மடம் மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா இன்று 11 - 10 - 1998 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 00 மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் யாழ். ஆயர் தலைமையில் நன்றித் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பாடசாலைத் திறந்த வெளியரங்கில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களால் ஆய்வு செய்யப்படும் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. இம்மங்கல நிகழ்வில் எமது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(59841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர்களுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 1

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நலலூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வயது முதிர்ந்த கலைஞர்கள் மூன்று பேருக்கு ரூபா 5 ஆயிரம் வீதம் அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

செ. கந்தசாமி (சிறப்புக் கலைஞர் — காளிகோயிலடி, திருநெல்வேலி), கு. இராதா (இசைக்கலைஞர் — கோண்டாவில்மேற்கு), நா. செட்டியார் (நாட்டுக் கூத்துக்கலைஞர்—கோண்டாவில் கிழக்கு) ஆகியோரே இவ்வாறு அன்பளிப்புப் பெறவுள்ளனர்.

(உ-7)

## விதை நெல் விநியோகம்

கந்தரோடை விவசாய சம்மேளனத்தை சேர்ந்த முப்பது விவசாயிகளுக்கு கெயர் ஸ்தாபனத்தின் உதவியுடன் தலா ஒவ்வொரு புசல் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

கந்தரோடை கிராமசேவை அலுவலர் எஸ். திருநாவுக்கரசு மேற்கொண்ட முயற்சி காரணமாக விவசாயிகளுக்கு இவ்விதை நெல் கிடைத்துள்ளது.

(உ-152)

# கிளிநொச்சி இழப்பு வரலாற்றுத் தோல்வி!

### றொனி கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 11

"சோழ அரசனின் படைகள் அநுராதபுரத்தை கைப்பற்றிய பின்னர் எமக்கு வரலாற்றில் ஏற்பட்டமாபெரும் தோல்வி கிளிநொச்சி நகர் வீழ்ச்சிதான்."

—இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் நிதியமைச்சரும், ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினருமான றொனி டி மெல்.

நேற்று முன்தினம்நாடாளுமன்றத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியல் நோக்கத்துக்காகவே யுத்தம் நடக்கிறது சிங்கள இளைஞர்கள் வீணாக உயிரிழக்கிறார்கள்"

—என்றும் அவர் சொன்னார்.

(உ-3)

FORUT - JAFFNA

**VACANCY**

PRE-SCHOOL CO-ORDINATOR

Applications are invited from suitably qualified candidates for above position. Work involves extensive field travel to:-

1. Guide pre - school teachers' training.
2. Develop curriculam for pre - schools.
3. Monitor performance of Pre - school teachers.
4. Enable mothers to be actively involved in pre - schools

Please send in CV to reach

Project Manager, FORUT
67, Temple Road, Jaffna.
before 22 - 10 - 1998

(59580)

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தூய,
பிரயோக கணிதம்
வினா விடை வகுப்பு
திரு. குணம்
சனி, ஞாயிறு-1-00 p. m.
துரித மீட்டல்
வகுப்புக்கள்
செவ்., வியாழன் 2-30p. m

(59791)

## இளம் பெண் மரணம்:

# சந்தேக நபர்களை ஆஜர் செய்ய உத்தரவு

குருநகர் சவக்காலைச்சந்தியில் கடந்த மே 30 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் இளம் பெண் ஒருவர் பலியாவதற்குக் காரணமாக இருந்த சந்தேக நபர்களை யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் பின்னர் சேவதாஸ் ஆன் ஜெதீனா (19 வயது-பாஷையூர்) என்ற இளம் பெண்ணின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. உறவினர் அதனை அடையாளம் காட்டி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இம்மரணம் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிமன்றில் எடுக்கப்பட்டபோதே மேற்படி உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

இம்மரணம் தொடர்பான விசாரணையை இம்மாதம் 30 ஆம் திகதி நடத்துவதெனவும்—

அன்றைய தினம் சாட்சிகளை ஆஜர் படுத்துமாறும்—அவர் மேலும் உத்தரவிட்டார்.

(உ-5)

## நினைவஞ்சலி

13 ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டு



!!!



அமரர்
பொன்னையா செல்லத்துரை
(பிரபல நொத்தாரிஸ் கிளாக்கர், நல்லூர்)
தோற்றம் 21-01-1907 மறைவு 14-12-1985
திதி: திருதியை

அமரர்
செல்லத்துரை காங்கேயன்
(இராவி உப அலுவலகப் பொறுப்பதிகாரி)
தோற்றம் 19-04-1939 மறைவு 03-10-1996
திதி: 11-10-1998

எங்களுடைய அன்புத் தெய்வங்களாக இருந்து எங்களை வழி நடத்தியவர்களை ஒரு கணப்பொழுதும் மறக்க முடியாமல் கண்ணீர் விட்டுத் தவிக்கின்றோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாய், சகோதரிகள், சகோதரன்,
மைத்துனர்கள்,
மருமகன்கள், மருமகள்கள்.

942, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(59828)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 79 — 02 — 1976



உதிர்வு 11 — 09 — 1998

செல்வன்
**புஸ்பநாதன் ரமணன்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய வைபவம் புரட்டாதித் திங்கள் 25ஆம் நாள் [11 - 10 - 98] ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புள்ள அப்பா, அம்மா,
சகோதரர், உறவினர்

இந்துகல்லூரி வீதி.
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

[59830]

யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி!

**தினேஷ் வெதுப்பக தயாரிப்புகளான**

✠ வெட்டுப்பாண் ✠ சாதாரண பாண் ✠ ரீ பணிஸ் ✠ கிறீம் பணிஸ் ✠ பேஸ்ரி
✠ பேபி றஸ்க் ✠ றஸ்க் ✠ கேக் வகைகள்

இவற்றுடன் இன்னும் பல தயாரிப்புகளும் நாளை (12-10-98) திங்கள் முதல்

**V. S. B. GROUP ஸ்தாபனத்தில்**

(யாழ். பஸ் நிலையம் முன்பாக)

பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறந்த நாள், திருமண கேக் வகைகளையும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். சகல தயாரிப்புக்களும் இயந்திரம் மூலம் நடைபெறும்.

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு குடாநாடு முழுவதும் முகவர்கள் தேவை.

விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

உரிமையாளர்
தினேஷ் பயிற்சி நிலையம் மானிப்பாய்.

(59827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ இளவாலை கன்னியர்மடம்மகா வித்தியாலயத்தின்
# நூற்றாண்டு விழா சிறப்பிதழ்
**1896 - 1996**

## யாழ். ஆயரின் அருளாசி

வலிகாமம் மேற்கில் வாழும் அனைத்து மக்களுக்கும் கல்வி அறிவைக் கொடுத்து பெண்களை முன்னேற்றி அவர்களின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு கடந்த நூறு ஆண்டுகளாக அரும் பெரும் பணியாற்றிய இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் பணி போற்றுதற்கு உரியது.

இன்று பெண் விடுதலை, பெண்களின் கல்வி அபிவிருத்தி என்று நிறையப் பேசப் படுகின்றது. ஆனால் நூறு ஆண்டுகளுக்கு முன்பே "பெண்களின் கல்வியே சமூக முன்னேற்றத்தின் காரணி" என்பதை உணர்ந்து மறை அறிவோடு உலக அறிவையும் புகட்ட ஏற்படுத்தப்பட்டதே இக் கல்வி நிறுவனமாகும்.

எமது நாட்டில்நடைபெறும் சோக வரலாற்றின் காரணமாக இந்தப் பாடசாலை சோலை இழந்து, பொலிவிழந்து இருந்தாலும் இதன் கடந்த காலச் சிறப்பையும் உன்னத பணிகளையும்மறந்துவிட முடியாது.

இப்பாடசாலை நூற்றாண்டை நிறைவு செய்திருக்கும் இவ்வேளையில் தனது கடந்த காலச் சிறப்பை அடையவும் மகளிருக்கு மகத்தான பணியாற்றவும் நல்லாசி கூறுகின்றோம்.

அதிவந்தனைக்குரிய
தோமஸ் சவுந்தரநாயகம்.
யாழ். ஆயர்.

## அதிபரின் ஆசிச் செய்தி

இளவாலைக் கிராமத்தின் மத்தியில் எழில் ஓவியமாக அமைந்திருக்கும் இளவாலை கன்னியர்மட மாகாவித்தியாலயமானது நூறு ஆண்டுகள் தன் வாழ்நாளை வெற்றிப் பெருமிதத்துடன் நிறைவு செய்கிறது. இப்பெருவிழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் உளம் நிறைந்த பூரிப்படைகின்றேன்.

1896 ஆம் ஆண்டு திருக்குடும்ப சபையைச்சார்ந்த ஐரோப்பிய மிஷனறிக் கன்னியர்கள், யாழ். திருச்சபையின் அனுசரணையுடன் இளவாலை மண்ணில் தம் காலடிகளைப் பதித்து, இங்கு வாழ் மக்களுக்கு ஆன்மீக அறிவையும், கல்வியறிவையும் ஊட்டி உலகிலே உத்தமர்களாக விளங்க வித்திட்டார்கள். குறிப்பாக பெண்களின் தனித்துவத்தைப்பேணி அவர்கள் எதிர் காலத்திலே நற்குல மகளிராக நாட்டிலே துலங்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக நிறுவப்பட்டதுதான் இன்று நாம் நூற்றாண்டு விழாவெடுக்கும் இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.

இதன் வளர்ச்சிப் பாதையில் கண்ட சாதனையும், சோதனையும் சொல்லில் அடங்காதெனினும் வேதனையைச் சாதனையாக்கி, வீழ்ச்சியை எழுச்சியாக்கி தன் பணி வாழ்வினை முன்னெடுத்துச் சென்ற தன் விளைவே இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இக்கல்லூரி அன்னையின் புதல்விகள் அழைத்தல் வாழ்விலும், ஆசிரியத் துறையிலும், மருத்துவத்திலும், மங்கலமான வாழ்க்கையிலும், அலுவலகங்களில் அதியுயர் பதவிகளிலும் இருந்து பணியாற்றுகின்றனர் என்றால், அஃது அவர்கள் தம்பணியால் எம் தாயின் புகழைத் தழைத்தோங்கச் செய்கின்றார்கள் என்பதே உண்மை.

சினந்தெழுந்த போரின் விளைவால் எம் கல்லூரிச் சிறார்கள் சிதறிய போதிலும் இறைவனிலே கொண்டிருந்த பற்றுதி மீண்டும் சொந்த மண்ணில் நூற்றாண்டு விழாவினை நிறைவு செய்ய இறைவன் அருள் மழை பொழிந்துள்ளார். இவ்வித்தியாலயத்திற்கு வித்திட்டு நூற்றாண்டு காலமாக நீர்பாய்ச்சி பசளையிட்டுப் பராமரித்துஇன்று நற்கனிதரும் பெருவிருட்சமாக இது திகழ்வதற்குத் தம்மைத் தியாகமாக்கிய அருட் கன்னியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இந்நன்றியின் சின்னமாக நூற்றாண்டு மலரினையும் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

தொடர்ந்தும் எம்கல்லூரித்தாயின் மடியிலே தவழ்ந்து அறிவுப்பாலைச் சுவைக்க வரும் மழலைகள் ஒவ்வொன்றும், அறிவிலும், ஆற்றலிலும், இறைபக்தியிலும் உயர்ந்து நாட்டின் நற்பிரஜைகளாகி மனித மாண்புமிக்க புதிய உலகினை உருவாக்கும் சிற்பிகளாகத் துலங்கிடவும் அதன் மூலம் எம் வித்தியாலய அன்னையின் புகழ் மேலும் பல நூறு ஆண்டுகள் நிலை பெற்றிடவும் வல்லவராம் இறைவன் அருள் கூரு இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

அருட்சகோதரி
மேரியோசப்பின் சந்தியாப்பிள்ளை
அதிபர்
இளவாலை கன்னியர்மடம் ம. வி.

## MESSAGE FROM SUPERIOR GENERAL OF THE HOLY FAMILY INSTITUTE

SANTA FAMIGLIA DI BORDEAUX
Via dei Casali Santovelli, 58
00165 Roma - Italia.

My dear Sister,

Past and Present of Ilavalai.

My Sincere and prayerful **Congratulations** on this very special occasion of the 100 th anniversary of your foundation. be assured of my special prayers for you and also for all those whose lives you touch and have touched throughout the years.


May Jesus, Mary and Joseph be with you always and keep you safe and faithful to God.

With you, I want to sing "Magnificat" the song of thanksgiving to God for all his blessings to our sisters and the people of Ilavalai throughout the past century. May God be blessed and may we praise him with all the sisters who have gone before us.

In your suffering and war-torn country you are called as Holy Family Sisters to do all you can to promote peace and communion. May you be real women of Hope in your land and among all the children and people with whom you live and work. May they all know, by the wftness of your lives, that **"COMMUNION IS POSSIBLE"**

All God's Special blessings and assurance of my love and prayers.

Revd. SR JOY SMITH
( Superior General of the H. F. Institute. )



பாடசாலையின் முன்புறத் தோற்றம்

## வரலாற்றுப் பதிவுகள் சில

கல்வியின் மூலமே மனிதன் மாண்புடன் வாழ்வதற்கு வழி அமைக்க முடியும் என்பதை எப்போதும் கருத்திற் கொண்டிருந்த கத்தோலிக்க திருச்சபையானது தனது கோயிற் பங்குகள் ஒவ்வொன்றிலும் பாடசாலைகளை நடத்தி வந்தது. இந்த வரிசையில் இளமைப் பொலிவுடன் துலங்கும் இளவாலைக் கிராமத்தில் ஐரோப்பியத் திருக்குடும்பச் சபையைச் சார்ந்த கன்னியர்கள் முன்னின்று உழைத்தமை என்றும் போற்றுதற்குரியது.

1896 ஆம் ஆண்டு இளவாலை மண்ணில் தம் காலடிகளைப் பதித்து இம் மக்களின் ஆன்மீகக் கல்வியையும், அறிவியற் கல்வியையும் முன்னெடுத்துச் சென்றனர். இக் கன்னியர் மடம் முளை கொள்வதற்கு மூல வித்தாய் அமைந்தவர்கள் ஐரோப்பியத் துறவிகளான சகோ. மதர் விக்ரறின் அவர்களும், சகோ. மதர் குளமென்ற் அவர்களும் ஆவர்.

1896 முதல் இத் தாபனம் 1901 வரை திருக்குடும்ப சபைக் கன்னியரின் தனியான முகாமைத்துவத்தின் கீழ் தனித்தியங்கியது.

1901 இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

1923 இல் ஆரம்ப ஆங்கிலப் பாடசாலை மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலப் பாடசாலையின் முதல் அதிபராக அருட் சகோதரி றீசா அவர்கள் கடமையாற்றினார்.

1930 இல் அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டுத் தனித்து இயங்கத்தொடங்கியது.

1959 இல் பாடசாலை நிர்வாகம் முற்றிலும் அரசின் கீழ் கொண்டு வரப்பட்டு அரசினர் பாடசாலையாக ஆக்கப்பட்டதோடு வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன.

1968 இல் ஆங்கில, தமிழ் பாடசாலைகள் இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு மகா வித்தியாலயமாக்கப்பட்டதுடன் எம் பாடசாலையின் முதன்மை மாணவியான அருட் சகோதரி லுசில்லா அவர்கள் அதிபராகக் கடமை ஏற்று பாடசாலையை பல முன்னேற்றப்படிகளில் வழி நடத்திச் சென்றுள்ளார்.

1978 முதல் 1986 வரை அருட் சகோதரி விக்ரறின் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் உயர்தர வகுப்புகளும், பாடசாலைக் கட்டடங்களும் விஸ்தரிக்கப் பட்டன.

1992 இல் நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் பாடசாலை இடம் பெயர்வுக்குள்ளாகியது.

1996 இல் சொந்த மண்ணுக்கு மீண்டு இன்று வரை புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது.

## கல்விப்பணிப்பாளரின் ஆசி

இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் முளை கொள்வதற்கு மூல வித்தாய் இருந்தவர்கள் திருக்குடும்பக் கன்னியர் சபைத் துறவிகள் என்பது வரலாற்றுண்மை. 1896 ஆம் ஆண்டில் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சார்ந்த ஐரோப்பிய துறவிகளால் சிறிய தாபனமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று செழுங்கிளை பரப்பி இளமை குன்றா எழிலுடன் பொலிவுற்றுத் திகழ்கின்றது.

கத்தோலிக்க சமய தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை அன்று முதல் இன்றுவரை தன்னை நாடி வந்த அனைவரையும் தன் பிள்ளைகளாக அரவணைத்து சமயம், கல்வி, ஒழுக்கம், கலை கலாசாரப் பண்பாட்டுத் துறைகளில் மட்டுமன்றி, சாரணியம், விளையாட்டுத்துறை போன்ற சகல துறைகளிலும் அவர்கள் முன்னணியில் திகழ வழிசமைத்து நிற்கிறது என்பது பெருமைப்படவேண்டிய ஒன்றாகும்.

வரலாறு காணா இடம்பெயர்வின் போதும் பல்வேறு வசதியீனங்கள் மத்தியிலும் தன் பண்டைய பெருமைகளையும், சிறப்புக்களையும் விட்டுக்கொடுக்காது கட்டிக்காத்து, பாடசாலை, கோட்ட, வலய, மாவட்ட அடிப்படைகளில் இடம்பெற்ற அத்தனை போட்டிகளிலும் தன் முத்திரையைப் பதித்து நிற்கின்றது இவ்வித்தியாலயம் என்று கூறுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் இவ்வூர் மக்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்க அயராது உழைக்க முன்னிற்கும் அதிபர், ஆசிரியர்களின் ஊக்கத்தைப் பாராட்டுகின்றேன். அத்துடன் நூற்றாண்டு விழா வைபவம் இனிதே நிறைவுற இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

க. கந்தசாமி
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை

## ஹென்றீஸ் அதிபர் வாழ்த்து

இளவாலையம் பதியில், இளமைப் பொலிவுடன் இனிய மணம் பரப்பி நிற்கும் பெருமைக்குரிய கன்னியர் மடம் மகாவித்தியாலயம் இன்று தனது நூறாவது அகவையை நிறைவு செய்து உள்ளப் பூரிப்படைந்து நிற்பதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இன்று பெண்கள் விடுதலை பெண்ணியம் என்றெல்லாம் பேசப்படுகின்ற போதிலும், பெண்களின் முன்னேற்றம், பெண்கள் விடுதலை, பெண்களின் பெருமை இவற்றுக்கெல்லாம் நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே வித்திட்ட பெருமை இம் மகாவித்தியாலயத்திற்கே உரியதாகும்.

அன்றும் இன்றும் கலைத்திட்ட இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளில் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு இணை கூற முடியாத வகையில் இக் கல்லூரி ஒப்புயர்வற்ற சேவையாற்றுவதனை நாம் கண் குளிரக் கண்டு மகிழ்வடைகின்றோம்.

இக் கல்லூரித் தாய் எத்தகைய இடர் வந்த போதிலும் எள்ளளவேனும் தளர்ந்து விடாது, தன்னிடம் சரணடைந்தோரின் அறிவுப் பசியைப் போக்கி, ஆன்ம இருளை விரட்டி தன்னலமற்ற சேவையினால் வையத்துள் வாழ் வாங்கு வாழ வழிகாட்டி நிற்பது யாவருள்ளத்திலும் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றது.

இக் கல்லூரி என்றும் தனது அளப்பரிய சேவையினால் எட்டுத்திக்கும் தனது இனிய மணம் பரப்பிப் புகழ் பூத்து விளங்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வண. பிதா யஸ்ரின் ஞானப்பிரகாசம்
இளவாலை
புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபரும்,
மானிப்பாய் மறைவட்ட முதல்வரும்,
பங்குத்தந்தையும்.

## பாடசாலைக் கீதம்

தமிழ்த் தாயின் மடியிலே தழைத்தோங்கி-
வளர்ந்துமே
கலைகள் மிளிர இதயம் மலரவே தினம் -
காத்தருள்வாயே
இறையே...... இறையே......
சீராளர் போற்றும் இளவாலையதனில்
மேன்மை பெற்று இலங்கிடுதே எம் -
கலாசாலை
தமிழ்......
இறையன்பை எம் அகத்தில் வைத்து நாம்
பிறரன்பு பெரு வாழ்வோமே
கண்ணியமும் சேவையாற்ற தானமைந்த-
மங்கையராய்
தரணியிலே நாம் வாழ்வோமே.
வாழ்க வாழ்க எமது கூடம்
வாழ்க அதிபர் ஆசிரியர்
ஆண்டு பல நிலைத்து நின்றிட
எமக்கு கருணை செய்வாயே இறையேதமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

யாழ் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்ற எமது கல்லூரி முன்னாள் ஆசிரியை

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன். பரமானந்த ம. வி.

(59767)

உ

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய

அன்னதான மடம் கட்டட நிதிக்கான

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு - 7993
2 ஆம் பரிசு - 1498
3 ஆம் பரிசு - 9757

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01) | 7747 | 06) | 7756 |
| 02) | 978 | 07) | 1009 |
| 03) | 2901 | 08) | 8617 |
| 04) | 6421 | 09) | 3186 |
| 05) | 4906 | 10) | 8640 |

நன்றி!

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கற்கோவளம் தொண்டர்கள்

(சி/5140)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் முருகர் பரமு**

மலர்வு: 10 - 02 - 1921
உதிர்வு: 11 - 09 - 1998

மாதம் ஒன்று சென்றாலும்
அழுது புரண்டாலும்
மண்ணுலகில் நாம் உள்ளவரை
மாறிடுமோ எமது துயர்;

அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

தச்சன் தோப்பு,
நாவற்குழி கிழக்கு.

(59802)

## பாம்பு தீண்டியது

**வெட்டிக் குவித்த புல்லுக்குள் இருந்த பாம்பு அதனை அள்ளிக் கொட்டித் துப்புரவு செய்தவரைத் தீண்டியது.**

புலோலி சமூகநல சேவை நிலையத்தில் பணிபுரியும், புலோலி காந்தியூரைச் சேர்ந்த நந்தகுலன் என்பவரே பாம்பு தீண்டிய நிலையில் கடந்த வியாழனன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-15)

## இலவச நூல் வழங்கல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொதுசன நூலகங்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றுக்கு ஒரு தொகுதி சமயசார்பான நூலகளை கொள்வனவு செய்து இலவசமாக வழங்கவுள்ளது.

இலவசமாக சமய நூல்களைப் பெற விரும்புவோர் தமக்குத் தேவையான நூல்களின் விவரங்களை கூடிய விரைவில் தமக்கு அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மைதிலி விசாகரூபன் கேட்டுள்ளார்.

## விசர்நாய்க்கடி: சிறுவன் மரணம்

இருமாதங்களுக்குமுன் விசர்நாய்க்கடிக்கு இலக்கான ஐந்து வயதுச்சிறுவன் அதற்கு தகுந்த சிகிச்சையை பெறாததால் உயிரிழந்தார்.

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வின்சலஸ் விஜயதரன் (வயது 5) என்ற சிறுவனே மரணமானான்.

கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட காய்ச்சலை அடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் நேற்று விசர் நாய்க்கடி நோயினால் அங்கு மரணமானார்.

(உ-15-139)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## உடற்கல்வி டிப்ளோமா

மேற்படி உடற்கல்வி டிப்ளோமா பாடநெறிக்குத் தெரிவான மாணவர்கள் அனைவரும் திங்கட்கிழமை (12-10-1998) காலை 9-30 மணிக்குப் புவியியல் மண்டபத்தில் நிகழவிருக்கும் தொடக்க வைபவத்திற்குத் தவறாது சமுகந்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

- பதிவாளர்.

(சி-5134)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்வி தேவதா கனகராசா**

வாசிகசாலையடி, உடுப்பிட்டி.
(செலான் வங்கி, வவுனியா)

அன்னையின் மடியில்: 31 – 03 – 1968
இறைவன் அடியில்: 29 – 08 – 1998

எங்கள் அன்புச் செல்வம் பபாவே!

எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மீளாத் துயில் கொண்டாயம்மா! நீ மறைந்த நாள் முதலாய் துடிக்கின்றோம், துவள்கின்றோம். எம் இதயம் எல்லாம் உன் பிரிவால் பெரும் சுமையாகிப் போனதம்மா!

கண்கள் எல்லாம் கங்கை வழிந்தோடுதம்மா!
எமைப் பிரிய ஏன் துணிந்தாய் எம் செல்வமே?

ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி அகால மரணமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் பங்குபற்றியோருக்கும் பற்பல உதவிகள் செய்தோருக்கும், அனுதாபச் செய்திகள், மலர் வளையங்கள் அனுப்பியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் 12-10-98 திங்கட்கிழமை திரு. திருமதி வரதராஜன் (சிறிய தந்தை, தாய்) இல்லத்தில் நடைபெற இருக்கும் 45 ஆம் நாள் நினைவஞ்சலியிலும், மதிய போசனத்திலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்,

அப்பா: த. கனகராசா (Physiotherapist)
தள- வைத்தியசாலை, வவுனியா

அம்மா: க. குணபாக்கியம்
அண்ணா: க. ரவிசங்கர் (U.S.A)
அண்ணி: ர. கமலவதனி (U.S.A)
மருமகன்: ர. சகாயன் (U.S.A)

இல. 19, வைரவர் கோயில் வீதி.
வைரவர் புளியங்குளம்,
வவுனியா.

(சி/5041)

## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய எமது சக ஆசிரியர்

திரு. வே. தபோதநாயகம் (சங்கீதம்)

அவர்களின் அன்புத் தந்தையார்

**மயில்வாகனம் வேதவனம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

ஆசிரியர் சழகம்
கோண்டாவில், பரஞ்சோதி வித்தியாலயம்.

(59759)


## வடமராட்சி மக்களுக்கொரு மகிழ்ச்சியான நற்செய்தி!

வடமராட்சி மக்களின் எண்ணற்ற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப்பெற்ற நெல்லியடி

செல்லமுத்துஸ் புடைவை மாளிகையின் 28 ஆம் ஆண்டு நிறைவையொட்டி

# தீபாவளிப் பண்டிகைக்கான மலிவு விற்பனை

**09-10-98 தொடக்கம் 25-10-98 வரை**

நடைபெறுகின்றது என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம். நீங்களும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புரியும்.

# செல்லமுத்துஸ் புடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(C/5126)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்து சமய

# கலைஞர், அறிஞர் கௌரவிப்பு

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

ஆய கலைகள் அறுபத்து நான்கின் அருள் வடிவமாக அமைந்த சிவபிரான் தனது அருட்பிரவாகத்தை கலைவடிவமாக இடையறாது சொரிந்தபடியுள்ளான்.

இன்று நமது மதத்தின் பெருமைக்காக அரிய பணிகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் ஆற்றி வரும் யாழ். இந்து சமயப் பேரவை இந்துக்களின் தலைமையமைப்பென்ற பெருமையுடன் சமய, சமூகப்பணிகளின் முன்னின்றுழைப்பதைப் பாராட்டாமலிருக்க முடியாது.

நம் மத்தியில் வாழ்ந்த, வாழ்கின்ற அறிஞர், கலைஞர், தொண்டர்களைப் பாராட்டிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவிருப்பதையிட்டு மிகுந்த மனப்பூரிப்படைகிறோம்.

இந்துசமயப் பேரவையின்பணிகள்பல்கிப் பெருகவும் பட்டமளிப்பு விழாச் சகல மங்கலப் பொலிவுகளுடன் நடைபெறவும் ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரனுடைய திருவருளை இறைஞ்சி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம்.

## இந்து நாகரிகத்துறைத்தலைவர் வாழ்த்து

எமது பிரதேசத்து அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் வகையிலே இந்து சமயப்பேரவை விழா ஒன்றினை நடத்த முன்வந்துள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். சமயம், நுண்கலை, சமூகம் ஆகிய பல்வேறு துறைகளிலே பங்களிப்புச் செய்த துறைசார் வல்லுனர்களை உரியவகையில் கௌரவிக்கும் இந்நிகழ்ச்சி காலத்தின் தேவையாகும். இத்துறைகளில் பங்களிப்பு நல்கியவர்களுடைய அரும்பெரும் பணிகளை நாம் கௌரவிப்பதோடு வாழும் இளந்தலைமுறையினருக்கு எமது சமய, பண்பாட்டு விழுமியங்களை அறியச் செய்யவும் இவ்விழா வழிவகுக்கிறது. இந்நிகழ்ச்சி இந்து சமயப் பேரவையின் செயற்பாட்டின் மற்றொரு பரிமாணத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இவ்விழாவிலே கௌரவம் பெறும் அறிஞர்களும் கலைஞர்களும் வளமுடன் வாழ்ந்து தொடர்ந்தும் நற்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணை நிற்பதாகுக. இந்துசமயப் பேரவையின் இத்தகைய கைங்கரியங்கள் மேன்மேலும் வளர்வதாகுக!

ப. கோபாலகிருஷ்ணஐயர்,
தலைவர், இந்துநாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## மெய்யியல துறைத் தலைவர் வாழ்த்து

இந்து மக்களின் வாழ்வியலானது கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றோடு பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்துள்ளது. இவ்வளர்ச்சியினூடாகவே இன்றும் இந்துக்களின் உயர் தர்மம் நிலைத்து நேரிய பண்மத்தை வெளிப்படுத்தி நிற்பது காணுதற்குரியதாகின்றது. கலைப் பெருமான்களும் அவற்றின் விழுமியங்களும் வாழ்வியல் நிலையோடு கலந்தமைந்துள்ளமை நுணுகி ஆராயுமிடத்துப் புலப்படவல்லது. இவை செம்மையான நெறி முறைக்கு எம்மை வழிப்படுத்துவனவாக அமைகின்றன. இவ்வகையில் ஒவ்வொரு கலைஞர்களும், அறிஞர்களும் சமய, சமூக வளர்ச்சிக்கு ஆற்றுகின்ற பணிகள் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வல்லல் நிறைந்த காலங்களிலும் தங்கள் தளரா மனத்தின் வழி வெளிப்படுத்தி நிற்கும் சேவைகள் பாராட்டிற்குரியனவே. கலையின் பெருமையையும் வாழ்வூடாக ஆத்மீக உணர்வின் வனப்பதையும் வெளிப்படுத்துவதற்குக் காரணமாக விளங்கும் கலைத் தொண்டர்களையும் பாராட்டிக் கௌரவிப்பது காலத்தின் தேவையாகும். இப்பணியில் காலத்தின் தேவையுணர்ந்து இந்து சமயப் பேரவையானது பதினொரு கலைஞர்களை, அறிஞர்களைக் கௌரவித்துப் பாராட்டுவது வாழ்த்துவதற்குரியதொன்றாகும். பன்முகப்பட்ட பணியாற்றும் இந்து சமயப் பேரவையினரின் கௌரவிப்பு விழாவானது தொண்டாற்றும் கலைஞர், அறிஞர்களை ஊக்குவிப்புடன் நற்கருமமாற்றும் மாண்பிற்கும் அவர்க்கும் கௌரவமாகின்றது.

கலாநிதி நா. ஞானகுமாரன்
தலைவர், மெய்யியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

## இசை வேளாளர் சங்கத் தலைவர் வாழ்த்து

கடந்த பல ஆண்டுகளாக இந்து சமயப் பேரவையின் பல்வேறு பணிகளை நாம் கண்டும் கேட்டும் மகிழ்கின்றோம். இந்து ஆலயங்களுடன் தொடர்புடைய நாதஸ்வர— தவில் கலைகளை வளர்க்கவும், அவற்றைப் பேணும் கலைஞர்களுக்கு கைகொடுத்துதவும் இந்துசமயப் பேரவை ஆர்வத்துடன் செயற்படுவதை நாம் மறக்கமுடியாது. இந்த வகையில் எமது இசைவேளாளர் சமூகத்தைச் சேர்ந்த இரு கலைஞர்கள் இன்றைய விழாவில் கௌரவிக்கப்படுகின்றார்கள். அது குறித்து எமது சமூகம் பெருமையடைகிறது. இதற்காக இந்து சமயப் பேரவைக்கு எமது இசைவேளாளர் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்துடன் மேற்படி விழா சிறப்புறவும் இந்து சமயப் பேரவையின் சமயப்பணிகள் மேலும் முன்னெடுக்கப்படவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

எஸ். ஆர். ஞானசுந்தரம்,
தலைவர்
இலங்கை இசை வேளாளர் சங்கம், இணுவில்.

## இந்துசமயப் பேரவைத் தலைவர் ஆசி

"கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்" என்பது திருஞானசம்பந்தர் வாககாகும். ஆயகலைகள் அறுபத்து நான்காகி மக்களுக்கு வாழ்வு சிறக்க அமைந்துள்ளன. கற்றவனே பிறவியின் பயன் பெற்றிட வல்லவன்; கல்வியானது அறிதல், உணர்தல், செய்தல் என்னும் படிகளில் மலர்வது. போதனையைப் பெற்று சாதனையில் சிறந்து வந்த கல்வி தனக்கும் மற்றவர்க்கும் பயன்படுகிறது. இந்த வகையில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் இந்து சமயப் பேரவை விருது வழங்கிக் கௌரவிப்பது மிகப் பொருத்தமே.

சமூகமும், சமயமும் நன்னெறிப்பட உழைக்கின்ற, உழைத்துக் கொண்டிருக்கின்ற இக்கலைஞர்கள், அறிஞர்கள் இறைவனின் அன்புக்குரிய மக்கள். இவர்களைக் கௌரவிப்பதோடு, இன்னும் இத்தகைய பெரும்பணி ஆற்றி வரும் கலையறிவுப் பெருமக்களை ஆண்டாண்டுதோறும் பாராட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

சமய சம்பந்தமான சங்கங்களும், சமூகங்களும் வசதியிழந்த மக்களுக்குக் கைகொடுத்துதவுவதற்கு வேண்டிய நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமெனவும் அன்பாக விண்ணப்பம் செய்கின்றேன். சைவசமய சமூகங்களை மனம் வாடாமல்; உடல் வாடாமல் கவனிப்பதும் பெரும் சேவையாகும்.

சீ. வீநாசித்தம்பி
இந்துசமயப்பேரவை, யாழ்ப்பாணம். தலைவர்.



## மாவட்ட

எம்மத்தியில் வா
துறையில் பாண்டித்திய
வாறு கௌரவித்து பட்
போதும், இன்றைய கா
கள் ஊக்குவிப்பாரற்று
சமயப்பேரவை வரலாற்
நிகழ்வை ஆக்கிப்படைத்
காட்டியுள்ளது.

பலருடைய
வில்லை என்ற
டங்களில் நிச்சயமாகக்
கின்றோம். இவ்வொப்ப
யும் இந்து சமயப்பேரவை
இதனை முன்னெடுத்தி
ஒன்றாகும்.

இத்தகைய புனி
வின்றுழைத்து வரும்
யாழ். இந்து சமயப்பே
சிறந்தோங்க எல்லாம்
வணங்கி வாழ்த்துகிறோ

மல்லாகம் மாவட்ட நீ
யாழ்ப்பாணம்.


# வியத்தகு பணிகள் பல புரிந்து

ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கலைவடிவமாக அமைந்திருப்பவன். இதனைப் பெரியபுராணம் உவமையிலாக் கலை ஞானம உணர்வரிய மெய்ஞ்ஞானமென்கிறது. இஞ்ஞானம் அவரவர் அந்நிலையில் உணரும் பெருமைக்கும் உரியது என்பது அது. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் தெய்வ சான்னித்தியம் கலை ஞான வடிவில் பிரகாசிக்கின்ற தன்மையை ஞானியர்கள் தமது அகக் காட்சி அளவியலில் கண்டு கண்டு வெளிப்படுத்தியுள்ளமை இதற்குச் சான்றுபகர்கிறது. ஆலயப் பூசையில்

மிக
விரு
பிரத


தெய

### வேத சிவாகம ஞானபானு



இவர் சைவ சித்தாந்தத்தைச் சித்தம் தெளிவுறக் கற்றறிந்தவர். வட மொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். சைவத் திருமுறைகளிலுள்ள சித்தாந்த நுண்பொருளைத் தெளிவுற விரித்துரைக்க வல்ல மகா நிபுணர். வேத சிவாகமங்களில் அபரிமிதமான புலமை பெற்றவர். ஸ்ரீ காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன குருமஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் இவருக்கு சித்தாந்த ஞானபானு எனும் விருதை வழங்கியுள்ளார். சோ. சிவசுப்பிரமணியக்குருக்களுக்கு பேரவை "வேத சிவாகம ஞானபானு" எனும் கௌரவ விருதை வழங்குகின்றது.

### நாதஞான வாரிதி



இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாவிட்டபுரம் நாதஸ்வர வித்வான் இராசா, சீர்காழி, எஸ். பி. எம். திருநாவுக்கரசு, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வரக் கலையை முறையாகப் பயின்று கொண்டார். நமது நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் தனது இசைத் திறமையை நிலைநாட்டியுள்ளார். இவரது இசைப்புலமையை வியந்து நாதஸ்வர கான கலாநிதி, ஏழிசை வாரிதி, ஏகச் சக்கராதிபதி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசு இவருக்கு கலாசூரி எனும் விருதை 1983 இல் வழங்கிக் கௌரவித்துள்ளது. நாதஸ்வரக் கலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இறை பணியாற்றிவரும் என். கே. பத்மநாதனுக்கு பேரவை நாத ஞான வாரிதி எனும் கௌரவ விருதை வழங்கிக் கௌரவிக்கிறது.

### ஞானக்கவிமணி




ந. வீரமணி ஐயர், இணுவிலில் பிறந்தவர். தனது பாடசாலைக் கல்வி நிறைவுற்ற பின் தமிழகம் சென்று இசை, நடன டிப்ளோமா பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். 33 வருடங்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பரத நாட்டியத்துறைத் தலைவராகத் திகழ்ந்து பல மாணவர்களை இத்துறையில் மேம்படுத்தினார். அம்பிகையின் அருட்கடாட்சம் பெற்ற இவர் பல கீர்த்தனங்களைப் பாடித் தனித்துவமான பெருமையைப் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் பரத நாட்டியத்துறை வருகை விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவரது புலமையைக் கண்டறிந்த பலஸ்தாபனங்கள் இவருக்கு இயலிசை வாரிதி, சம்வாதீஸ்வரர், மகாவித்வான், கலாபூஷணம், அருட்கவிச்செம்மல் கவிமாமணி, சாகித்திய சிரோன்மணி, முத்தமிழ் வித்தகர் எனப்பல பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன. இவரது இயலிசை, பரதநாட்டியத் திறமையைக் கௌரவித்துப் பாராட்டி எமது பேரவை ஞானக்கவிமணி எனும் விருதை வழங்குகின்றது.

### சாகித்திய இசை



ஆரம்பக் கல்வி
றுக் கொண்ட இவ
லைக்கழகம், திருப்
தமிழ்க் கல்லூரி
கீதபூஷணம், பண்
பட்டங்களைப் பெ
சமூக மூத்த இசை
ரது இசைப் புலமை
ழிசைச் சோதி",
னாகா" "பண்
நெறிய மிழிசைய
வழங்கப்பட்டுள்ள
ருக்கு ஞான சிரோன்மணி எனும் விருதை
முதலாக இசையில் முதுதத்துவமாணி
கான பட்டத்தைப் பெற்று ஆய்வறிஞர
வல் நிபுணராகவும் திகழும் பெருமைக்
இந்திய வானொலியில புகழ்பூத்த
நா. வி. நவரத்தினத்துக்கு எமது
இசைப் பேரரசு எனும் கௌரவ விருதை
வின்றது.

### லய ஞானசு



இவரது தந்தை
ஞான குபேரபூபதி,
ஆவார். இவர் பெரி
மான் சண்முகசுந்தர
ஆகியோரிடம் தவில்
கொண்டார். புலிக்
யாருமா என்ற முது
கணாமூர்த்தியின் ம
இயல்பான பெரு
கொண்டவர். தனது
வயதில் இழந்த இவ
மேடைகளில் தனது
நாட்டி வருகிறார். எதிர்காலத்தில் லய
வுள்ள தெ. உதயசங்கருக்கு லயஞான
விருதை வழங்குகின்றது.

### சைவசித்தாந்த தத்

இயல்பாகவே நுண்மாண் நுழைபுல
நிறைந்த இவர் கலை விஞ்ஞான பட்
தாரியாவார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத
ஆகியவற்றில் மிகுந்த புலமை பெற்றவ
யாழ். பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னா
அதிபர் நல்ல அனுபூதிச் செல்வர். சை
சித்தப் பேரறிஞர். திரு. ஐ.பொன்னை
(அருளானந்த சிவம்) அவர்களை ஞா
குருவாகக்கொண்டு சைவசித்தாந்த சா
திரங்களை ஐயந் திரிபறக் கற்றவ
யாழ். பல்கலைக்கழகம் தமது முதலாவ
பட்டமளிப்பு விழாவில் இவருக்கு "சித்தாந்
வித்தகர்" என்னும் கௌரவ விருதை
வரலாற்றுப் புகழ்மிக்க மன்னார் திருக்கேதீ
தலைவராக இறுதிவரையிருந்து, சைவத் த
மு. ஞானப்பிரகாசருக்கு தேகாந்த நிலை
துவஞானி எனும் கௌரவ விருதைப் பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யப் பேரவை நடத்தும்
# ப் பட்டமளிப்பு விழாச் சிறப்பிதழ்

## நீதிபதி வாழ்த்து

வாழ்கின்ற கலைஞர்களையும் பல்வேறு
தியம் பெற்ற அறிஞர்களையும் தக்க
பட்டம் வழங்குவது ஒரு மரபாக இருந்த
காலகட்டத்தில் இப்படியான நிகழ்வு
று இருக்கின்ற நிலையில், யாழ். இந்து
ாற்றில் இடம் பெறாத இந்த முதல்
டத்து அரியதொரு முன்னுதாரணம்

பயர்கள் இக் கௌரவிப்பில் இடம்பெற
ருப்பினும் தக்கவர்கள் அடுத்த வரு
க் கௌரவிக்கப்படுவர் என்று நம்பு
ப்பற்ற நிகழ்வை முன்னோடியாகச் செய்
ரவை தனது பல்துறைப் பணிகளோடு
த்திருப்பது பாராட்டிப்புகழ வேண்டிய

புனிதமான பணிகளில் ஈடுபட்டு முன்
இந்துக்களின் தலைமையமைப்பான
பேரவையின் அனைத்துப் பணிகளும்
ம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானை
றான்.

மு. திருநாவுக்கரசு
மாவட்ட நீதிபதி

. நீதிமன்றம்,

## மாவை ஆதீனகர்த்தர் அருளாசி

யாழ். இந்துசமயப் பேரவை முதலாவது பட்டமளிப்பு விழாச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இந்துக்களின் தலைமையமைப்பான யாழ். இந்து சமயப் பேரவை ஆன்மீகம், சமய சமூக உயர்வு, இன ஒற்றுமை, சைவநீதி மேம்பாடு என்பவற்றை உயிரூட்டும் தொண்டுகளோடு இப்போது அறிஞர், கலைஞர்களை நினைவுபடுத்தி அவர்களது வழிநின்று அருமையான உலகைக் காண்பதற்கும் அரும்பாடு படுகின்றது.

இந்த நூற்றாண்டில் விளைந்த அறிஞர், கலைஞர் குழாமிலிருந்து இப்போது சிலரைச் தெரிவு செய்து முதன்மைப்படுத்தி உலகுக்கு அறிமுகஞ் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பது நாம் செய்த தவப்பேறேயாகும்.

இந்து சமயப் பேரவையின் இத் தொண்டுகள் பயனடைவதாகுக; அவர்களது பணி நிறைந்த பேறுகளைத் தரவல்லதாக அமைய வேண்டுமென மாவை முருகப் பெருமானை நினைந்து பிரார்த்திக்கிறேன்.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்,
ஆதீனகர்த்தர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்,
மாவிட்டபுரம்.

## துணைவேந்தர் வாழ்த்து

இந்து சமயப் பேரவை கடந்த காலங்களில் சிறப்புற இயங்கி வருவதைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். சமூகத்தால் வாழ்கின்ற ஆன்மீகம், கலை, அறிவியல் ஈடுபாடு கொண்ட பலரைக் கௌரவித்து அவர்களைச் சமூகத்தில் முதன்மைப்படுத்த மேற்கொள்ளும் இவ்வரிய பணியைப் பாராட்டாமலிருக்க முடியாது.

பலரின் அர்ப்பணிப்பு மூலம் இப் பேரவையின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்துக்களின் தலைமையமைப்பாகச் செயற்படும் இப்பேரவை இந்துக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு அமைப்பு இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்துள்ளது. நெருக்கடி நிறைந்த வேளையில் இவர்கள் நிதானத்துடன் ஆற்றிய அரும் பணிகளைப் போற்றாமல் இருக்க முடியாது.

இந்துசமயப் பேரவையின் பணிகள் மேன் மேலும் வளர்ந்தோங்கவும், பட்டமளிப்பு விழாச் சிறப்புற அமையவும் இறைவனை இறைஞ்சி எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
- துணைவேந்தர்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# விருதுகள் பெறும் அறிஞர்கள், கலைஞர்கள்

க முக்கிய அம்சமாக நிருத்த, கீத, வாத்தியம் அமைந்திருப்பதும் இறைவனுடைய மிக
ிருப்புக்குரிய உபசாரங்களில் இவை முக்கியம் பெற்றுத் திகழ்வதும் இவ்வுண்மையின்
ரதிபலிப்பேயாகும்.

கலை வளர்வதன் மூலம் 'இறைவனின் அருட்பிரவாகம் மேலோங்கும் என்பதோடு
தய்வீகக் கடாட்சம் கிடைக்கப்பெறும் என்ற பெரும் உண்மையும் மறைந்திருப்பது

[11ஆம் பக்கம் பார்க்க]

## ப் பேரரசு

விலை நயினாதீவில் பெற்
இவர் அண்ணாமலைப் பல்க
ருப்பனந்தாள், ஆதீன செந்
போன்றவற்றில் கற்று சங்
ன்னிசைப் புலவர் போன்ற
பற்றவர், யாழ். பல்கலைக்
ச விரிவுரையாளரான இவ
மையைப் பாராட்டி "தமி
, "தமிழிசை ஞானரத்
ண்ணிசை அரசு", "திரு
ய" ஆகிய பட்டங்கள்
ன; இலங்கை அரசு இவ
தை வழங்கியுள்ளது. முதன்
I M Phil என்ற ஆய்வுக்
ஞராகவும், சிறந்த அரங்கி
க்குமுரியவர். இலங்கை,
த பாடகராகத் திகழும்
து பேரவை சாகித்திய
தை வழங்கிக் கௌரவிக்

## ஓவியப் பேருவி



நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 21-09-1933 இல் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியின் பின் தமக்கிருந்த ஓவியத் திறமை காரணமாகப் பல ஓவியங்களை வரைந்து தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். ஓவிய உலகில் இவரது வர்ணப் படங்கள் மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன. அனுபவ முதிர்வின் பின் தெய்வீக ஓவியங்களை வரைந்து எமது பிரதேசத்தில் பெருஞ் சாதனை படைத்துள்ளார். ஈழத்திலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களில் உள்ள திரைச்சீலைகளை வேத சிவாகம முறைக்கு அமைவாக வரைந்து கொடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் வர்ண ஓவியங்களை வரைந்து, புகழ் பூத்த பெருமையைத் தன்னகத்தே கொண்டவர். இவருக்குப் பல நிறுவனங்கள் பல விருதுகளையும், சான்றிதழ்களையும் அவ்வப்போது வழங்கிக் கௌரவித்துள்ளன. பொ. சுப்பிரமணியத்துக்கு எமது பேரவை - ஓவியப் பேருவி எனும் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றது.

## சமூக ஜோதி



தனது தந்தையார் ஸ்தாபித்த மில்க்வைற் தொழிற்சாலையைப் பொறுப்பேற்று சிறந்த முறையில் நடத்தி வந்தார். இத்தொழிற்சாலை மூலம் பெறும் வருவாயின் பெரும் பகுதியை மரம் நடுகை இயக்கம், சிவாலயத்திருப்பணி, சமூகத்தொண்டு போன்றவற்றிற்கு செலவு செய்துள்ளார். சைவத் தமிழ்ப் பெருவள்ளல் சேர். பொன். இராமநாதனின் பின் தமது சொந்தப் பணத்தில் அர்ப்பணிப்புடன் சமூகப்பணி செய்தவர் இவரொருவரேயென்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவருடைய தொழில் நிலையம் கலைக்கூடமாக, சைவ மடமாக, கலாசாலையாகத் திகழ்கிறது. இவருக்கு பல நிறுவனங்கள் பல பட்டங்களை அவ்வப்போது வழங்கிக் கௌரவித்துள்ளது. அமரத்துவம் அடையும் வரை ஓயாது சைவத் தமிழ் சமூகத் தொண்டாற்றிய கலாநிதி க. கனகராசாவுக்கு பேரவை சமூக ஜோதி எனும் விருதை தேகாந்த நிலையில் வழங்குகின்றது.

## சுரபி

தையார் தவில் மேதை லய
தி, வி. தெட்சணாமூர்த்தி
பரிய கணேசு, வலங்கை
நரம், சு. புண்ணியமூர்த்தி
ல் வித்துவத்தைக் கற்றுக்
க்குப் பிறந்தது பூனை
துமொழிக்கிணங்க தெட்
மகன் உதயசங்கர் என்ற
ருமையையும் பெற்றுக்
து தந்தையாரைச் சிறு
இவர் 12 வயதிலிருந்து பல
து வித்துவத்தை நிலை
ஞான சூரியனாகத் திகழ
ன சுரபி எனும் சௌரவ

## லயஞான வாரிதி




இவர் சிதம்பரம் ஏ. எஸ். இராமநாதன் அவர்களைக் குருவாகக் கொண்டு மிருதங்கக் கலையை முறையாகப் பயின்று கொண்டவர். கடந்த பன்னிரண்டு வருடங்களாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் வாத்தியத் துறை விரிவுரையாளராகக் கடமை புரிந்து வருகிறார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி இசையரங்குகளிலும் தமது வாத்தியத் திறமையை நிலைநாட்டியுள்ளார். எஸ். மகேந்திரனுக்கு திறமையைப் பாராட்டி சிங்கப்பூரில் தாளலயதிலகம் எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

## சிற்பக் கலா ஞானபானு



இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். நாவலர் வித்தியாசாலையில் கற்றுக் கொண்டார். தெய்வீக சொரூபங்களை வடித்தெடுக்கும் புனிதமான கலையைத் தன் தகப்பனாரிடம் முறையாகக் கற்றுக் கொண்டார். கடந்த 35 ஆண்டுகளாக இத்துறையில் ஈடுபட்டு வருகிறார். கருங்கல், தாம்பரம் ஆகியவற்றில் தெய்வ சிற்பங்களை வடித்தெடுப்பதில் வல்லுனரான சிற்பக்கலை ஞானபூபதி, சிற்பரத்தினம், சிற்பஞான கேசரி, சிற்பகலா ஞானபூபதி, ஆகிய பட்டங்கள் திரு. அ. யோகஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## தேவசிற்ப கற்பகம்



திருநெல்வேலியில் பிறந்த இவர் தனது பாடசாலைக் கல்வியை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் புகழ்பூத்த ஆசிரியர்களிடம் பெற்றுக் கொண்டார். 127 இற்கு மேற்பட்ட சிற்பத் தேர்களை ஆக்கித்தந்த இவர் இத்துறைக் கல்வியை இவரது தந்தையார் திரு. விநாயகர் ஆறுமுகம் மூலம் பெற்றுக் கொண்டார். இவர் தமிழகம் சென்று மாமல்லபுரம் கணபதி ஸ்தபதிகளிடம் இத்துறை அறிவை வளர்த்துக் கொண்டதுடன இந்திய சிற்பக் கலைக் கூடத்திற்குச் சென்று மரச் சிற்பத்திலும் குறிப்பாக தேர், மஞ்சம், சப்பறம் போன்றவற்றை ஆக்குவதிலுள்ள பல நுணுக்கங்களையும் அறிந்து கொண்டார். தன் தொழிலில் வரும் வருவாயில் ஒரு பகுதியை தர்மப்பணிக்கென்று ஒதுக்கி தன் பணியைத் தனித்துவமாக்கிக் கொண்ட பெருமைக்குரியவர். பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தில் ஆ... அமைத்த தேர் சிற்ப நுட்பத்தை இந்தியக் கலைஞர்கள் வியந்து பாராட்டியுள்ளனர்.

## த்துவ ஞானி



வம்
ட்ட
ருதம்
வர்.
ான்
சைவ
லய
நான
ாஸ்
வர்.
வது
ந்த
த வழங்கியுள்ளது.
தீஸ்வரபரிபாலனசபைத்
தமிழ்த்தொண்டு செய்த
லயில் சைவசித்தாந்தகு
பரவை வழங்குகின்றது.

## உபதலைவர் வாழ்த்துகின்றார்

இலங்கையின் இந்து சமய வரலாற்றில் இன்று ஒரு முக்கிய நாளாகும். தமிழ், இந்துசமயம், தத்துவம், கலை, கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக நமது காலத்தில் அரும்பணி ஆற்றியவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கு வெளியே, முறையாக அமைக்கப்பட்ட இந்து நிறுவனமொன்று இன்று பட்டமளித்துக் கௌரவிக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை பல இந்து சமயச் சங்கங்களையும் ஆலய பரிபாலன சபைகளையும், இந்து குருமாரையும், இந்து அறிஞர்களையும், கல்விமான்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். இந்து சமய, கலை, கலாசார வளர்ச்சியிலும் இந்துக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதில் முன்னின்று உழைக்கும் ஒரு நிறுவனமாகும். பரந்துபட்ட இந்து சமூகத்தின் மதிப்பையும் ஆதரவையும் பெற்று அது செயற்பட்டு வருகின்றது. இன்று எம்மால் பட்டமளித்துக் கௌரவிக்கப்படும் சான்றோர்களும், கலைஞர்களும் தமது அரிய சேவையால் இந்து சமூகத்தின் அன்பையும், மதிப்பையும், கௌரவத்தையும் பெற்றவர்களாவர்.

இவ்விழா சிறப்புற எமது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

ஆ. மகாலிங்கம்
உபதலைவர்

இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
31
—
03
—
1968

ஆண்டவன் அடியில்
29
—
08
—
1998

### செல்வி தேவதா கனகராசா
( SEYLON BANK, VAVUNIYA )

பொங்கிவரும் பலநூறு கண்களின் நீர் புனலாகி
தங்க,வெமை எல்லாம் தவித்துத்தடு மாறவிட்டு
தங்கச்சிலை யாயுதித்த தவக்கொழுந்தே! நீமறைந்து
திங்களொன்றுடன் பாதி சென்றழிந்ததே மகளே!

வங்கக்கடல் வற்றி நெடு வானெரிந்து போனாலும்
செங்கதிரோன் மேற்கில் திசைமாறி உதித்தாலும்
எங்களிதயத்தில் எழுந்திருக்கும் கோயிலில் நீ
என்றுமிருப்பாய் தேவதா! ஏதுமிதில் மாற்றமில்லை;

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்;

உன்பிரிவு தாங்காது துயருறும்
அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், அத்தைமார், தம்பிமார்,
தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார்.

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி.

(சி/5051)

## வழுக்கையாறில் வெடிப்பொருள்கள் மீட்பு!

வலிகாமம் தெற்கு, ஒக். 11 அளவெட்டி விவசாய சம்மேளனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும்வழுக்கியாறு புனரமைப்பின்போது ஏராளமான வெடிப்பொருள்கள் அப்பகுதியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன;

ஷெல்கள், குண்டுகள், ரவைகள் போன்ற வெடிப்பொருள்கள் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன;

கடந்த காலங்களில் இப்பகுதியில் இடம்பெற்ற சண்டைகளின் போது இவை இப்பகுதிகளில் விழுந்து வெடிக்காமல் நிலத்தினுள் புதைந்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது;

சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட இதுபோன்ற வெடிப்பொருள்கள் புனரமைப்பு பணியாளரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன;

விவசாய சம்மேளனத்தினூடாக அருகில் உள்ள படையினருக்கு தகவல் தரப்பட்டு, அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ். கமத்தொழில் திணைக்களத்தினரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், வாய்க்கால்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அம்பனையில் ஆரம்பமாகி அளவெட்டியூடாக செல்லும் சுமார் மூன்று மைல் தூர வழுக்கியாறு தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது;

அளவெட்டி விவசாய சம்மேளனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இப்பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

(உ–152)


## குறிஞ்சி மருந்தகம் & கொம்னிக்கேசன்

எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி
போட்டோ பிரதி எடுக்கும் சேவையை
12-10-98 திங்கள் முதல்
ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்;

போட்டோப் பிரதிகளுக்கு நியாயமான
கட்டணம் அறவிடப்படும்.

இல. 3. புதிய சந்தை,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.
தொலை பேசி: 021-2210

(சி/5138)


## இலவச கண் மற்றும் மருத்துவ முகாம்

இன்று (11-10-98) ஞாயிறு காலை 9:00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரையும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய பணிமனையில்
P.J, பெர்னாந்து ஆதரவுடன்
இலவச கண் சிகிச்சை, நீரிழிவுப் பரிசோதனை
மற்றும்
இரத்த அழுத்தப் பரிசோதனையும் நடைபெறும்;

தலைவர்,
லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்.

(சி/5131)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு இரா. பாலச்சந்திரன் அவர்களின்
அன்புப்புதல்வி
செல்வி
### சுகன்யா பாலச்சந்திரன்
கடந்த 11.9. 1998 அன்று காலமானதையிட்டு அவரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!

மக்கள் வங்கி யாழ். பிராந்திய
தலைமையகப் பணியாளர்
நலன்புரிச் சங்கம்

[59778]

## கண்ணீர் அஞ்சலி

எமது வடபிராந்திய முகாமையாளர்
திருவாளர் சி. சிவச்சந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையாரும்,
குரும்பைகட்டி புலோலியைச் சேர்ந்தவருமான,


### கிட்டிணர் சிதம்பரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர், வைத்தியர், சோதிடர்)
அவர்கள்

08 - 10 - 98 இல் சிவபதமடைந்ததையிட்டு, அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி,
உத்தியோகத்தரும்,
ஏனைய உத்தியோகத்தர்களும்,
தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை,
கமநல சேவை நிலையம், நல்லூர்.

(59774)

## நீங்காத நினைவலைகள்



மலர்வு:
01
—
11
—
1940

உதிர்வு
11
—
09
—
1998

### அமரர் சு. பத்மநாதன்

ஆண்டுகள் ஆறரை அலுவலகமதிலே
அருகருகே அமர்ந்திருந்து ஆற்றிய நின்
நிர்வாகத் திறமைகளை நினைத்து நான்
வியக்காத நாளில்லை நினைவிலே நிலைத்திட்டாய்!

கண்ணிமைக்கும் நேரமதில் காற்றினிலே
கலந்து விட்டாய்! காலனவன் அழைத்திட்டான்!
காலமெல்லாம் எம்மைக் கலங்கிட வைத்திட்டாய்!
நடந்ததெல்லாம் எமக்குக் கனவாக மாறாதோ?


= சோதிநாதன்

(59784)

## 31ஆம் நாள் நினைவு தினமும்
## நன்றி நவிலலும்



திருமதி
### பரமேஸ்வரன் புவனேஸ்வரி
தோற்றம்:-
20—01—1949



செல்வன்
### பரமேஸ்வரன் நிமலன்
தோற்றம்:
11—02—1980

அகால மரணம்:
10—09—1998

எனது மனைவி புவனேஸ்வரியினதும் மூத்த புதல்வன் நிமலனினதும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், நண்பர்கள், நண்பிகள், பலவிதத்திலும் உதவிகள் புரிந்த அயலூரைச் சேர்ந்தவர்களுக்கும், ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும் எனதும் எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களினதும் நெஞ்சில் நீங்காத நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்;

— தம்பு பரமேஸ்வரன் (கணவன்)
ப. சுமித்தா (மகள்)
ப. லயந்தன் [மகன்]

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

(59804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரே போக்கில்...

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் மாதாந்த நிகழ்வு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதனைத் தக்க தருணமாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, கிளிநொச்சிச் சமர் தொடர்பான இதுவரை வெளியிடப்படாத புதிய தகவல்களை வெளியிட்டார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையோ கிளிநொச்சி இழப்பு தற்காலிகமானது என்றும் அது இராணுவ தந்திரோபாயம் என்றும் தமது பக்கத்தைக் தற்காப்புச் செய்து கொண்டார்.

இருவர்களினது நாடாளுமன்ற உரைகளையும்படிக்கும் எவரும், அரசாங்கமும் சரி, எதிர்க்கட்சியும் சரி போரை நிறுத்தி கிளிநொச்சியில் உண்டான அழிவுகள் போன்ற, அழிவுகள் இனியும் இடம்பெறாமல் தவிர்க்கும், தடுக்கும் அவசியத்தை வலியுறுத்தவில்லை. உணர மறுக்கின்றன என்பதனைப் புரிந்து கொள்வர்.

கிளிநொச்சிச் சமரில் இறந்தோர், காயமுற்றோர், மற்றும் காணாமற் போனோர் எண்ணிக்கை அரசாங்கம்—ஆயுதப்படையினர் — இழந்து போன ஆயுத தளபாடங்களின் தொகை என்பன குறித்த விவரங்களை வெளிக் கொணர்வதும், மறைப்பதும் அவர்களின் நோக்கமாக இருந்தது.

போர் சரியானமுறையில் உகந்த வழியில் நடத்தப்படவில்லை என்பதனை ரணில் விக்கிரமசிங்காவும், தமது இராணுவ உத்திகளால் ஐ. தே. க. ஆட்சிக் காலத்தைவிட நல்ல பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளன என்று ரத்வத்தையும் விளாசித் தள்ளி உள்ளனர். இருவரின் பேச்சுக்களுமே அரசியல் ஆதரவு திரட்டும் நோக்கம் கொண்டவை; உள்ள ஆதரவு சரிந்து கொள்ளாமல் தடுக்கும் எண்ணம் கொண்டவை.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒவ்வாதது. அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று வாய் ஓயாமல் இரண்டு தரப்பினருமே கடந்த பல வருடங்களாகக் "கத்தி" வருகிறார்கள்!

ஆனால், போரை நிறுத்துவது தொடர்பாக ஆக்கபூர்வமாகச் சிந்திக்காமல் செயற்படாமல் அதனை அரசியல் ஆதரவு திரட்டுவதற்கான மூலதனமாக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாக உள்ளனர். அன்றைய, இன்றைய அரசுகளின் போர்த் தந்திரங்களை ஒப்பிடுவதிலும் குறை காண்பதிலும் காலங் கழிக்கப்படுகிறது.

வடக்கு—கிழக்கு மக்கள் போருடனும், ஏனைய பிரதேச மக்கள் பாதுகாப்பற்ற சூழலுடனும் சேர்ந்து வாழவேண்டிய — அவை வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை என்று பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய — நிர்ப்பந்தத்தை தொடரச்செய்வதே ஆளுங் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் போக்காக உள்ளது.

போரை நிறுத்தி மக்கள் அழிவைத் தடுத்து. அவர்கள் நலன் பேணவேண்டும் என்பதில் இரு தரப்புகளுக்குமே அணுவளவு அக்கறையும் இல்லை!

---

# துன்புறும் உள்ளங்களோடு சேர்வதே இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றி

**ஞாயிறு நற்பிரசாதம்**

மனிதனுடைய வாழ்வில் பல தத்துவங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவனுடைய வாழ்விலும் அவனவனுக்கென்று தத்துவம் உண்டு. இயேசு தனது வாழ்வில் பல தத்துவங்களை வாழ்ந்து காட்டியுள்ளார்.

இன்றைய வாழ்க்கைச் சூழ் நிலையில் நாம் பல கேள்விகளையும் புரியாத நிலைகளையும் அறிவினால் காரணம் சொல்ல முடியாத நிகழ்வுகளையும் சந்திக்கின்றோம். சந்திக்கின்ற நபர்களையும் பார்க்கின்றோம்.

இன்றைய நாளில் மிக முக்கியமான வாழ்க்கைத் தத்துவத்தை இன்றைய சிந்தனை எமக்கு எடுத்துரைக்கின்றது. "பத்துப் பேர் குணமானார்களே! மற்ற ஒன்பது பேர் எங்கே? என்கிறார்." இன்றைய சூழ் நிலையில் நிகழும் நிகழ்வுகளுக்கு எப்படி?, என்ன? யாருக்கு? நன்றி சொல்வது என்று பல உள்ளங்கள் கேட்கின்றார்கள். அழுகையும், கண்ணீரும் இழப்பினால் தாங்க முடியாத சோக உணர்வுகளினையும் சுமந்து செல்பவர்கள் இன்று கேட்கும் பெரிய கேள்வி.

கடவுள் காலங்களினூடாகவும் நிகழ்ச்சிகளினூடாகவும் தம்மை வெளிபபடுத்துகின்றார். அவ் வெளிப்படுத்தல்கள் இன்பம், துன்பம், கஸ்டம், கவலைகள், வெற்றி தோல்வி, இழப்புக்கள், சோகங்கள், கவலைகள் ஆகியனவற்றின் மத்தியில் வாழும் நாம் என்றும் கடவுளை மறந்து, வெறுத்து, ஒதுங்கி, விரக்தியுடன் வாழ்வது கடவுளின் பிள்ளைகளுக்குரிய வாழ்வல்ல.

மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம் கடவுளின் மக்கள் என்று உணர்தல் வேண்டும்.

வாழ்க்கையில் நாம் பலரை அடிக்கடி நன்றியோடு நினைவு கூருகின்றோம். வாழ்வில் ஒருவனுடைய சிறப்பை எடுத்துக் காட்டுவது பொன்னும், பொருளும் பட்டமும் அல்ல. அவனது சொல்லும் செயலும் தான் கடவுளுடைய வழிகள், எண்ணங்கள் கசப்பாக இருக்கும், துன்பங்களாக இருக்கும், ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாக இருக்கும் "என்ன நேர்ந்தாலும் நன்றி சொல்லுங்கள், ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் அதுவே"

கடவுளுடைய வழிகள் எம் வாழ்வின் ஏணிப்படிகளாக அமையட்டும். துன்பமடைபவர்களோடு, கஷ்ரப் படுபவர்களோடு நாம் எமது உணர்வுகளூடாக மட்டுமல்ல செயல்களினூடாகவும் இணைந்து கொள்வோம். அருகில் துன்பப்படும் உள்ளங்களோடு சேர்ந்து கொள்வதே நாம் இறைவனுக்குச் செலுத்தும் நன்றியாகும். ★

அருட்திரு சார்ள்ஸ் கொலின்ஸ்

---

# பேச்சுக்குக் கோருகிறார் அங்கவீனமுற்ற சிப்பாய்

கொழும்பு, ஒக். 11

வெல்லமுடியாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அனைத்துக் கட்சிகளும் பேச்சு நடத்த வேண்டும்.

அங்கவீன முற்ற முன்னாள் இராணுவ ஊழியர்களின் சங்கத் தலைவர் அசோகா தயாரத்தின மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அதிரடிப் படையில் பணியாற்றி 1985 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஒரு கையை இழந்தவர் அவர்.

"யுத்தத்தை உருவாக்கியவர்கள் அரசியல் வாதிகளே. அவர்களின் பிள்ளைகள் யுத்த முனைக்கே செல்வதில்லை. வறிய குடும்பப் பிள்ளைகளே யுத்தத்துக்குச் செல்கின்றனர்" என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். (உ-3)

---

# எதிரொலி

● கிளிநொச்சியில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பின்னடைவைப் பற்றி விசாரிப்பதற்குஉயர் மட்ட மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

★ அப்படியானால், தந்திரோபாய நடவடிக்கை என்று இதுவரை சொன்னதெல்லாம்......!

● 2050 ஆம் ஆண்டில் உலக சனத்தொகையில் இந்தியா முதலிடம் பெறும்!

★ குசேலர் பரம்பரையினர்தான் பெரும்பான்மையாக இருப்பார்களோ?

● ஆசிரியர்களுட் தீய நடத்தையுடைய சிலர் இருப்பதால் தான் ஆசிரியர் சமுதாயம் முழுவதுமே கெட்ட பெயரைச் சம்பாதிக்கின்றது.

★ ஆ! சிறியர்!

● இலங்கை வானொலியில் பி.பி.சி சிங்கள சேவை அஞ்சலை நிறுத்தத் திரை மறைவிற் சிலர் முயல்கிறார்கள்.

★ விசிறியை முறித்துவிட்டால் காற்று வீசுவதையே தடுத்துவிடலாம் என நினைத்து விட்டார்களோ?

● சரக்குக் கப்பல்களில் யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்குப் பயணிகள் அனுப்பி வைக்கப் படுவர்.

★ சாக்குகளிற் கட்டப்பட்டுத்தான் அனுப்பி வைக்கப்படுவார்களோ என்னவோ!

● சிங்கப்பூரிலுள்ள மயானங்களிற் பாரிய இட நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது.

★ விண்வெளி மயானம் ஒன்றை ஏற்படுத்தினால் இட நெருக்கடி தீரும்; விண்ணுலகடைந்தார் என்பது அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்.

○ கிளிநொச்சிச் சமரில் இறந்த இராணுவ வீரர்களை அடையாளங்காண்பதில் பல குளறுபடிகள்; இறந்ததாகக் கருதப்பட்டு, மரணச் சடங்குகள் நடைபெற்ற வேளை, அவர்கள் விடுமுறையில் தம் வீடுகளுக்குச் சென்ற சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

★ வாழ்க்கை நிரந்தரமானதல்ல என்று சொல்வார்கள்; இப்பொழுது மரணமும் நிரந்தரமற்றதாகி விட்டது!

-இடியன்

---

யாழ். பல்கலைக்கழக

# விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கிய வீரர், வீராங்கனைகளுக்கு விருது வழங்கும்வைபவம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகப் பங்குபற்றுவார்.

விளையாட்டுத்துறையில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய 24 வெவ்வேறு அணிகளைச் சேர்ந்த சகல துறை வீரர், வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

79 மாணவர்கள் விருது பெறுகிறார்கள். இதில் 24 விருதுகள் மீள வழங்கப்படுகின்றன.

51 அரை விருதுகளும், புதிய மாணவர்களுக்கான 17 விருதுகளும் வழங்கப் படும்.

அத்துடன் 58 பேர் கௌரவிக்கப்படுகின்றனர். (ஐ-3)

---

# காணாமற்போனோர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 11

காணாமற்போனோர், கைது செய்யப்பட்டோர் தொடர்பாக யாழ். நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்வதற்காக புதிய விண்ணப்பப்படிவங்கள் கைதானோர், காணாமற் போனோர், பாதுகாவலர் சங்கத்தினால் நிரப்பப் பட்டு வருகின்றன.

காணாமற் போனோரின் உறவினர்கள் இந்த விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்காக நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்கக் காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

---

# முதியோர் தின விழா

தென்மராட்சி, ஒக். 11

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி பளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் முதியோர் தின விழா நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குப் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக பளை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சூ. அம்பிகைபாலனும், சிறப்பு விருந்தினர்களாக பச்சிளைப் பள்ளி அபிவிருத்திக்கழகத் தலைவர் கு. ந. பாலச்சந்திரன், பளைப் பிரஜைகள் குழுத் தலைவர் முனீஸ் துரைசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

முதியோர் தினத்தையொட்டி பளைக் கோட்ட பாடசாலைகளில் மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் சித்திபெற்றோருக்கான பரிசில்கள் விழாவில் வழங்கப்படும்.

பளைப் பிரதேசத்தில் உள்ள சகலகிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த அதிகூடிய வயதுடைய முதியோர்களைக் கௌரவித்தலும் இவ் வைபவத்தில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-117)

---

## நாளை

புரட்டாதி - 26

திங்கட்கிழமை

திதி: ஸப்தமி

முற்பகல்: 11.27 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

பிற்பகல் 02.06 வரை.

சுபநேரம்: 12.32 - 1.02

ராகுகாலம்: 7.32 - 09.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## உதயவாக்கு

தீமை செய்தால் தீமை செய்வதுதான் உலக வழக்கம். ஆனால் தீமை செய்தால் நன்மை செய்வது உத்தமர் வழக்கம்

-குருநானக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வெற்றுக்காஸ் சிலிண்டர், காஸ்குக்கர், அலுமாரிகள் போன்ற வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல: 15, 1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (59795)

ரெகிங் ரேபின் கண்ணாடி, வான்கோழி, கினிக்கோழி, மணித்தாரா, வெள்ளடியன், சிலிக்கி, வண்டம், முயல், சணல் ஆடு (பாலுடன்); டாசோன் பென், பொமேரியன் நாய்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி மகாவித்தியாலயம் அருகில். (59814)

இலக்கம் 6, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளியில் இரண்டு பரப்புக் காணியுடனான புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சந்திரகுமாரன், 73/34c சரணான்கார வீதி, தெகிவளை. தொலைபேசி: 074211715 (சி - 5028)

## தவறிவிட்டது

யோகராசா சிவகுமார் ஆகிய எனது தேசிய (751441177V), விசேட (0909031134), அடையாள அட்டை இராணுவப் பாஸ் (524 Brigade-153552) என்பன 5-10-98 அன்று வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தோற்சவம் அன்று ஆலய சூழலில் தவறிவிட்டன. (ஒரே கவரில் வைத்தபடி) கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ரஜனி பீடா ஸ்ரோரின், பருத்தித்துறை வீதி, உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி. (59753)

இராசதுரை இராசசிங்கநாயகம் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0903016293) ஆவரங்காலுக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சூரியா பார்மசி, அச்சுவேலி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்; சன்மானம் வழங்கப்படும். (59803)

செல்வரெட்ணம் சிறிஸ்கந்தரெட்ணம் ஆகிய எனது லைசென்ஸ் எயார் ரிக்கற் யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 183, 4 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [59824]

## மணமகள் தேவை

இந்துசமயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் நகைத்தொழில் செய்கின்ற 33 வயது 8 இல் செவ்வாய் கிரக நிலையை உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 798, மே/பா உதயன், இல: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [59760]

யாழ். இந்து கௌரவ குடும்பம் வயது 34, செவ்வாய்க் குற்றமுள்ள 6' 1" உயரமுள்ள கனடாவில் கணனி பொறியியலாளராக (Computer Engineer) தொழில் பார்க்கும் மணமகனுக்கு படித்த, ஒழுக்கமான, உயரமான அழகான மணப்பெண் தேவை. தொடர்பு இல. 797, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ். (59747)

## இறைச்சிக் கோழிகள்

எல்லாவகையான இறைச்சிக் கோழிகளும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre [நல்லூர் வீடியோ, சென்ரர் வளவு] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (59522)

புறொயிலர் இறைச்சிக் கோழி, விற்பனைக்குண்டு, சுத்தம் செய்து கொடுக்கப்படும் ஞாயிறு தினங்களில் அரைக்கோழியும் பெறலாம்- 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி. பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். ((59825)

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும், தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்). (59783)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 101, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி அருகில், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (59806)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும், தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (59817)

## ENGLISH- MATHS

O/L கணிதம் ஆங்கிலத்தில Distinction, Credit பெறுபேறுடைய (Paper Class) உட்பட துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (59788)

## கண்டெடுக்கப்பட்டது

இரத்தினசிங்கம் சௌந்தரி ஆகிய உங்களது விசேட அடையாள அட்டை (இல 0903017223) கண்டு எடுக்கப்பட்டு பின்வரும் முகவரியில் உள்ளது: சோபனா ஆடையகம் 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (59823)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான பல்பொருள் ஸ்தாபனத்தில் முகாமையாளராக (வேலை செய்யும்) 27 வயது நிரம்பிய பரணி நட்சத்திரம் 12 இல் செவ்வாய் (கிரகபாவம் (46) என்பவருக்கு சைவபோசன மணமகள் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், 3 ஆம் கட்டையடி, வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு. (59775)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் வண். வடமேற்கு முருகமூர்த்தி வீதியில் குடியிருப்புக்கேற்ப நன்றாக பராமரிக்கப்பட்ட நல்ல வருவாயுள்ள நன்னீர்க்கிணற்றுடன் கூடிய தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: பிறேம் நகைமாடம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (59737)

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் ஜெற் மோட்டோஸிற்கு அண்மையில் பல வருடகாலமாக மிக முன்னேற்றகரமாக இயங்கி வந்த பேக்சறியும் அதனுடன் இணைந்துள்ள இரு கடைகளும் விற்பனைக்குண்டு, ஒரு கடையை மட்டும் வாங்க விரும்புவோரும் பார்வையிடலாம். தொடர்பு: மா. தேவராசா, 5, மயிலணி வீதி, சுன்னாகம். (59790)

## BAIRAHA BROILERS

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். ரேஸ் வைரா புறொயிலர் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு: லக்கி பாம்கவுஸ், மதவடி ஒழுங்கை திருநெல்வேலி. (59820)

# ஆங்கிலம் தபால் மூலம்

தொழில் புரிவோர், தேடுவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் பயிற்றப்படுகிறது. முத்திரை, சுய விலாசமிட்ட உறையுடன் எழுதவும்.

LAMPS Ltd.
76. Mahaveethiya,
( Grand Street )
Negombo
(C/5132)

சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

# வேப்பமரம் விற்பனைக்கு

எமது சிறுவர் இல்ல விடுதியில் உள்ள 03 வேப்ப மரங்களைத் தறித்து அகற்றுவதற்குக் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மரங்களை 14-10-98 இன் முன் பார்வையிடலாம்.
வைப்புப் பணம் — ரூபா 1000
முடிவு திகதி — 14 - 10 - 98

சோ. பத்மநாதன்
செயலாளர்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி-5143)

# இதய வாழ்த்துக்கள்

தென்னிந்திய திருச்சபையின் இல்லங்களில் கல்வி கற்று பல்கலைக்கழக பட்டம் பெற்று வெளியேறி உள்ள

S.P குணசிலன், K சுகேந்தினி,
K. குமரவேள், K. தக்ஷாயினி

ஆகியோரை மனமார வாழ்த்துகின்றேன்.

—பவாணி ரட்ணம்
(இல்லப் பழைய மாணவி)

(59832)

# 18ஆவது வணிகஜோதி வெளியீட்டு விழா - 1998

இடம்: யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
காலம்: 12-10-98 திங்கட்கிழமை காலை 10-00 மணி
தலைவர்: செல்வன் வி. விக்னகரன்
பிரதம விருந்தினர்: திரு. ப. சிவநாதன் (தலைவர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திரு. வ. க. பாலசுப்பிரமணியம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - வணிகக்கல்வி)
நூல் வெளியீடும் வெளியீட்டுரையும்: திரு. க. கனகரட்ணம் (சிரேஷ்ட நிதி உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்)
அறிமுகவுரை: திரு. இ. இரட்ணம் (சிரேஷ்ட விரிவுரையாளர் வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- வர்த்தக மாணவர் மன்றம்

(59816)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 — 09 — 1947



மறைவு 11 — 09 — 1998

திருமதி
**மல்லிகா இராஜரட்டினம்**
[M. Sc (Architecture), A.I A (S L), RIBA (Lond), Chartered Architect]

11-10-1998

அம்மா!

"தியாகிகளின் பட்டியலில் உனக்கு
இடம் வேண்டாம்
அது அரசியல்;
அறிஞர்களின் அறிக்கையிலும்
இடம் வேண்டாம்
அது வியாபாரம்;
கண்ணியத்தோடு கடமை செய்து
காலமானாய்
அது போதும்;
உன் ஆத்ம சாந்திக்கு
அது போதும் எமக்கு"

எம் அன்னையின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது நன்றிகள்.

82/3, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். - பிள்ளைகள் (59776)

# சோபனா ஆடை அகம்

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 'சோபனா ஆடை அகம்' வழங்கும் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி!

**20 % 30 % வரையான இத்தள்ளுபடி 19 - 10 - 98 வரை மட்டுமே!**

இறக்குமதி செய்யப்பட்ட நவீன ஆடைத்தெரிவுகளுக்கு ஆம்! | அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

**சோபனா ஆடை அகம்** — இல. 16, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**வினோ நகைப் பூங்கா** — 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(59822)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கானகேள்விகள் 20-10-1998 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிர்மாணப் பயிற்சி, நிறுவனத்தில் இச்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையவராவார்.

தகுதியுடையோர் உரிய கேள்விவைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலைவிவரம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
| --- | --- | --- |
| 1. நெடியகாடு—ஊறணி வெள்ளவாய்க்கால் பக்கச்சுவர் கட்டுதல் | 300/- | 1000/- |
| 2. கொம்மாந்தறை மகா வித்தியாலய வீதி அமைத்தல் | 300/- | 1000/- |
| 3. உதய சூரியன் வீதி அமைத்தல் | 300/- | 1000/- |

கேள்விப் பத்திரங்கள் 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சந்திரசேகரம்
தலைவருக்காக
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 06-10-1998. (சி/5146)



யா / வண்ணை
# நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

பழைய மாணவர் சங்கத்தால் 1998 - 10 - 11 இல் நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 1998 - 12 - 13 க்கு பிற்போடப்பட்டுள்ளது.

செயலாளர்
(59829) பழைய மாணவர் சங்கம்



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

செல்வி
## சுகன்யா பாலச்சந்திரன்

மலர்வு: 01-12-80 உதிர்வு: 11-09 98

11 - 10 - 1998 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
இரா. பாலச்சந்திரன்
மக்கள் வங்கி
பிராந்திய அலுவலகம்
யாழ்ப்பாணம்

இல. 1, இராச வீதி,
நல்லூர்.
(கல்வியன்காடு சந்தைக்கு அருகில்)
(59837)



யா / சமூக அபிவிருத்தி மன்றத்தின்
# 10 ஆவது ஆண்டு விழா

இடம்:- திவ்ய ஜீவன சங்க மண்டபம் [நல்லூர்]

காலம்:- 11 . 10 - 98 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- காலை 9-30 மணி

பிரதம விருந்தினர்:- திரு. க. சண்முகநாதன் (யாழ். அரசாங்க அதிபர்)

தலைவர் திரு. கோ. தியாகராஜா தலைமையில் ஆரம்பமாகி கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி!

- நிர்வாகச் செயலாளர்

(59838)


# போசாக்கு கல்வி பயிலரங்கு

திட்ட அமுலாக்கல் நாடாளுமன்ற விவகார அமைச்சின் போசாக்குப் பிரிவின் அனுசரணையுடன்வலை பிரதேசசெயலக திட்டமிடல் பிரிவினர் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான போசாக்குக் கல்விப் பயிலரங்கு நாளை (12 - 10 - 98) புதன்கிழமை காலை 9-30 மணிக்கு மாசார் அ. த. க. பாடசாலை மண்டபத்தில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி. குணாளசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

# நேர்முகப் பரீட்சை

இறுதியாக நடைபெற்ற தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கடிதம் கிடைத்தும் இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் யாழ். கல்வி வலயம் ஒன்றில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிப்போர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் கல்விச் சான்றிதழ், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வாக்காளர் பதிவேட்டின் பிரித்தெடுப்புச் சான்றிதழ், மேற்படி பரீட்சைப் புள்ளியை உறுதிப்படுத்தும் ஆவணம், நற்சான்றிதழ்கள் இரண்டு ஆகியவற்றின் மூலப் பிரதிகளையும், போட்டோ பிரதிகளையும் சமர்பிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி இரு தினங்களில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. என கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-7)

# நூற்றாண்டு விழா

இளவாலை, ஒக். 11

இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடத்தின் நூற்றாண்டு விழா இன்று காலை 9 மணிக்கு திருப்பலிப்பூஜை ஒப்புக் கொடுத்தலுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

யாழ். ஆயர் அதி. வணக்கத்துக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகவும், சங்கைக்குரிய மேன்மைத் தலைவி சகோதரி ஜோய் சிமித் கௌரவ விருந்தினராகவும், முன்னாள் கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் எஸ் சிவராஜா சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-48-7)

# விளையாட்டு போட்டி

நவாலி, ஒக். 11

நவாலி முருகானந்தா பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று 11ஆம் திகதி ஞாயிறு பி. ப 3 மணி முதல் நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய முன்றலில் இடம் பெறும்.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக அந்திரான் ஆலய பிரதமகுரு கோ. கௌரீஸ்வரக் குருக்களும், சிறப்பு விருந்தினராகநவாலி சென் பீர்றேஸ் றோ. க. த. க பாடசாலை அதிபர் சிறில் சுகந்திரனும் நவாலி கிழக்கு கிராம சேவையாளர் ந. பற்குணராசாவும் கலந்து கொள்வார்கள். [ஐ - 100]

# தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)

யோகச் சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான சிவில் தொண்டர் படை வீரர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் எம். எல். ஏ. எம். மீராசாகிபு (27 வயது) என அடையாளம் காணப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது பலியான பொதுமகன் சிதம்பரநாதன் ரூபநாதன் (17 வயது) என்ற கட்டடத் தொழிலாளி ஆவார்.

இவர் தற்செயலாக இதில் அகப்பட்டதாக பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வருகின்றது. (இ-21)

# மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

★ முல்லைத்தீவு — 117
★ மாத்தளை — 113
★ நுவரெலியா — 96
★ காலி — 97
★ மாத்தறை — 100
★ அம்பாந்தோட்டை - 96
★ அம்பாறை — 130
★ புத்தளம் — 11[illegible]
★ குருனாகல் — 110
★ அநுராதபுரம் — 104
★ பொலன்னறுவ — 94
★ பதுளை — 98
★ மொனறாகலை — 84
★ இரத்தினபுரி — 91
★ கேகாலை — 121
★ யாழ்ப்பாணம் — 110

கடந்த வருடம் யாழ். மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி 93 என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐந்தாம் ஆண்டு..

(முதலாம்பக்கத் தொடர்)

155 புள்ளிகள்.

★ எஸ். ஜனார்த்தனன் (உடுவில் மகளிர் கல்லூரி) — 154 புள்ளிகள்.

★ அஜந்தன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) — 153 புள்ளிகள்.

முன்னணிப்பெறுபேறுகள்

மேற்படி பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகள் சிலவும் அப்பாடசாலைகளில் இருந்து சித்தி பெற்றோர் மற்றும் தோற்றியோர் எண்ணிக்கையும் வருமாறு:-

தோற்றியோர் எண்ணிக்கை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது.

★ புனித ஜோன் பொஸ்கோ 60 பேர் சித்தி (164)

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை 47 பேர் சித்தி (148)

★ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை 30பேர் சித்தி (90)

★ உடுவில் மகளிர் கல்லூரி 25 பேர் சித்தி (72)

★ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 20 பேர் சித்தி (94)

★ சென் பற்றிக்ஸ் கல்லூரி 22 பேர் சித்தி (63)

★ சென் ஜோன்ஸ் கல்லூரி 22 பேர் சித்தி (81)

★ தெல்லியடி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயம் 22 பேர் சித்தி (71)

★ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை 24 பேர் சித்தி (134)

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 16 பேர் சித்தி (67)

★ தம்பாலை சைவப் பிரகாச வித்தியாசாலை 16 பேர் சித்தி (53)

★ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் 10 பேர் சித்தி (39)

★ சென் பெனடிக் றோ. க. பாடசாலை 13 பேர்சித்தி (41)

★ கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம் 11 பேர் சித்தி (38)

★ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 13 பேர் சித்தி (52)

★ இணுவில் மத்திய கல்லூரி 9 பேர் சித்தி (71)

★ யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை 16 பேர் சித்தி (86)

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை 11 பேர் சித்தி (65)

★ ஆனைப்பந்தி மெதடிஸ்த பாடசாலை 12 பேர் சித்தி (53)

★ திருக்குடும்பக் கன்னியர்மடம் 11 பேர் சித்தி (58)

மேற்படி பரீட்சையில் கொழும்பு டி. எஸ். சேனநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் அதி உயர் புள்ளியைப் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் பெறுபேறுகள் அடுத்த வார முற்பகுதியில் இங்கு எடுத்து வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# தொழிலுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்)

வடமராட்சியின் கரவெட்டி மற்றும் கரணவாய் பகுதிகளில் இருந்து வடமராட்சியின் கிழக்கு கடற்பகுதியான செம்பியனபற்று, மாமுனைப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களே வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அ. தங்கராசா [வயது 43 கரவெட்டி], சு. செல்வரட்ணம் [வயது 42, கரணவாய்], ப. சிறீதரன் (வயது 27 கரணாய் கரவெட்டி), த. தவகுலரட்ணம் (வயது 38 கரணவாய், கரவெட்டி), த. வசீகரன் (வயது 33 கரணவாய், கரவெட்டி) ஆகியோரே இந்த ஐவரும் ஆவார். (இ-7-36)

# வியத்தகு பணி...

(7 ஆம் பக்கத் தொடர்)

அறிதற்பாலது.

இந்து சமயப் பேரவை இதனை நன்குணர்ந்து அறிஞர், கலைஞர்களை முதன் முதலாக கௌரவித்துப் போற்ற முன் வந்துள்ளது.

இம் மாபெரிய ஞாலத்தில் அர்ப்பணிப்புடன் பல அறிஞர்களும், கலைஞர்களும் தொண்டு பல செய்துள்ளனர். அத்தகைய பெருமக்களின் பொன்னார் திருவடிக்கு பூவிட்டு எமது மனப் பூர்வமான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று நம்மத்தியில் கௌரவிக்கப் படவிருக்கின்ற துறைசார் அறிஞர், கலைஞர்கள் இறைவன்திருவருட்குட்பட்டு எம்மால் கௌரவிக்கபடவுள்ளதை இந்நேரத்தில் ஞாபகமூட்டாமல் இருக்க முடியாது கௌரவம்பெறும் 11 பெருமக்களில் இருவர் தேகாந்த நிலையில் கௌரவிக்கப்படுகின்றனர். ஒருவர் சைவப் பெரியார் அமரர் மு. ஞானப் பிரகாசம், மற்றவர் மின்வைத் தொழிலதிபர் அமரர் கலாநிதி கனகராசா ஆவர் கௌரவம் பெறும் அனைவரும் கணிக்கத்தக்க பணிகளை நம்முன் ஆக்கிப்படைத்துள்ளனர்.

சி. சக்திகிரீவன்
(கௌரவ செயலாளர்,
இந்து சமயப் பேரவை.)

இந்த மலர் வெளிவருவதற்கு மனமுவந்து நிதி உதவிய வர்த்தக நிறுவனங்கள் அனைத்துக்கும் இந்துசமயப் பேரவையின் அன்பான நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHEAP SALE ! CHEAP SALE !!

## தீபாவளி விசேட மலிவு விற்பனை!

### சீமாட்டி

(புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சீமாட்டி புடைவைக் கடலின் அனைத்துப் புடைவைகளும் என்றும் எங்கும் கிடைக்காத விசேட மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன;

- ★ புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள் ரூபா 260/- இலிருந்து ரூபா 700/- வரை!
- ★ கொழும்பு ஓஷானிக் இம்பெக்ஸ் அனுசரணையுடன் ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், லேஞ்சிகள்,
- ★ பாபறா, ஜோ ஜோ, இன்ரர் கூலர், பட்டர் சில்க் செக் துணிவகைகள்,
- ★ சேட்டிங் சூட்டிங் வகைகள்,
- ★ வேட்டி சால்வைகள்.
- ★ இந்தியா. இந்தோனேசியா. தாய்லாந்து, சிங்கப்பூர் றெடிமேட் அயிட்டங்கள்

இன்னும் பலப்பல தினுசுகள்!

மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு!

சுபமுகூர்த்தப் புடைவைகளின் கைராசியான நிறுவனம்.

இன்றே நாடுங்கள்;

♥ சீமாட்டி ♥

[புடைவைக் கடல்]

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2196

''இலக்கம் 15. நவீன சந்தை, யாழ்ப்பாணம்'' என்ற முகவரில் அமைந்திருக்கும் எமது கிளையான 'மங்கை சில்க்' இலும் இதே மலிவு விற்பனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(சி/5120)


## யாழ் - கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

காலிக போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகை வாயிலாக அறிகின்றோம்;

அரசாங்கம் சிக்கலானதும், சீரற்ற தன்மையுடையதுமான இந்தப் போக்குவரத்தினைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தீர்க்கமான ஒரு முறையை நெறிப்படுத்த வேண்டும்;

மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போக்குவரத்துத் தொடர்பு அத்தியாவசியமானதாகும். இதனை எவ்வித தடங்கல் இன்றியும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசின் கடப்பாடாகும்.

போர் உத்வேக நிலையை அடைந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவியைப் பெற்று இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதிப் போக்குவரத்து வசதி செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து மாநாடு ஒன்றைக் கூட்டி யாழ். — கொழும்பு போக்குவரத்துச் சேவையைச் சீர் செய்யுமாறு வேண்டுகின்றோம்;

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## படையினரின் ..

(முதலாம் பக்கத் தொடர்)

மக்கள் உறவுகள் நல்லமுறையில் இருப்பதை வெளிநாட்டு செய்தித் தாள்களும் ஏற்றுக் கொண்டுள்ளன;

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானம் என்றசொல்லின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை எனவே அதற்கு எதிராக போராட வேண்டிய நிலையில் அரசு இருக்கின்றது.

தற்போதைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்துகின்றது என்பது உண்மை, ஆனால் அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதுமில்லை அவர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்துவதுமில்லை என்பது உண்மையே.

நாட்டில் கூடிய விரைவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலை நாட்டுவது தான் உயிர்த்தியாகம் செய்த படையினருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த, சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க, முப்படைத் தளபதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-6)

## சிறுவன் காயம்

கைதடியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 5 வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்;

கைதடியைச் சேர்ந்த வீரசிங்கம் தரிசன் என்ற சிறுவனே காயமடைந்தவராவான்.

## விமானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள மன்னார் சென்ற லயன் ஏயர் அதிகாரிகள் கொழும்பு திரும்பி விட்டனர்;

கொழும்பில் இருந்து மன்னார் வந்த 5 சுழியோடிகள் மட்டும் தொடர்ந்து மன்னாரில் தங்கி உள்ளனர் என்று மன்னார் உதவி அரசஅதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

விமானத்தை மீட்கும் முயற்சி தொடர்பாக மல்லாவியில் உள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது; (இ-7)


SALE! SALE!!

இதோ!

(முந்துங்கள்)

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 19-10-98 வரை மட்டுமே!

நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்

மகாநதியில்

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும் தீபாவளிப் புடைவைகளுக்கு ஆம்

மகாநதி
புடைவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
4, நவீன சந்தை, சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணிவகைகளுக்கு பிரத்தியேக காட்சி அறைகள்

16. நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்,
I KUF நவீன சந்தை, (மேல் மாடி) சாவகச்சேரி.

(சி/5137)



வாடிக்கையாளர்களே!

★ ஒரு வருட பூர்த்தியையிட்டு நல்லி சில்க்ஸின் மலிவு விற்பனை ★

♠ சாறிகள் ♠ ஸ்கேட் ♠ பிளவுஸ்
♠ சேட் வகைகள் ♠ ரீசேட்கள் ♠ ரவுசர் துணி வகைகள்

அனைத்தும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்ள.

ராசி சில்க்ஸ்
70,71A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

நல்லி சில்க்ஸ்
121/1. மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

எமக்கு யாழ். நகரில் வேறு கிளை ஸ்தாபனங்கள் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.

(சி/5125)





உ
சிவமயம்

மங்களகரமான திறப்பு விழா

1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல் காரணமாக சேதமடைந்த எமது ஸ்தாபனம் மீண்டும் சகல வசதிகளுடனும் புனரமைக்கப்பட்டு — வட இலங்கையில் பழமை வாய்ந்த ஜவுளி வியாபாரத்தில் முதன்மை வாய்ந்த சில்லறை மொத்த வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஸ்தாபனம் - மீண்டும் அதே இடத்தில் சகலவகையான ஜவுளிகளுடனும் நாளை [12 - 10 - 98] மங்களகரமாக திறந்து வைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகளை நேரடியாக தரமுடியாமைக்கு வருந்துகிறோம்

இந்த அன்புடனான அழைப்பை ஏற்று அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் திறப்புவிழாவில் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2985

(சி/5142


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.